315

1935

Registered No. M 1500.   "NAVASAKTI"

நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு'   'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு ௧௪   1935ஆ நவம்பர்மீ   பரல் ௧

OFFICE OF THE REGISTRAR
9 - DEC 1935
MADRAS

உள்ளுறை

	பக்கம்
கடவுள்	௧
நமது சிந்தனை	௫
தியானங்கள்	௯
தொல்காப்பியத்துப் புறத்திணை யியலின் முதற் சூத்திரம்	௧௧
காந்தமும் சாந்தமும்	௧௨
சுந்தர சுவேசனு	௧௫
திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும்	௧௮
ஊழும் — முயற்சியும்	௨௧
இசையேது	௨௪

வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0.   வெளிநாடு ரூபா 4.

பாம்பன்:

ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்

இயற்றிய நூல்கள்

	ரூ.	அ.
சிவஞானதீபம் 2-ஆம் பதிப்பு	0	8
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குருசிட சம்பவ வரலாற்று வியாசமும் 1-ஆம் பதிப்பு.	1	0
வேதவியாசம்	0	10
சிவயாத்ருவியாச மூலமு முரையும் 2-ஆம் பதிப்பு.	0	11
பத்துப் பிரபந்தம்	0	7
தகராலய ரகசியமும், உரையாகிய சதானந்த சாகரமும்	2	8
பரிபூரணானந்த போதமும் உரையாகிய சிவசூரியப் பிரகாசமும்	2	0
சத்தாத்வைத நிர்ணயம்	0	8
திருப்பாவும், உரையாகிய திட்பமும், குறிப்புரையும்	10	0
ஸ்ரீமத் குமாரசுவாமியம்	5	0
செக்கர்வேள் செம்மாப்பும், செக்கர்வேள் இருமாப்பும்	0	6
சிறுநூற்றிரட்டு 6-ஆம் பதிப்பு	0	6
குமாரவேள் பதிற்றுப்பத் தந்தாதி 3-ஆம் பதிப்பு	0	2
குமாரகுருதாச சுவாமிகள் பாடல் திருவலங்கற்றிரட்டு 1-ஆங்கண்டம் திருவலங்கற்றிரட்டு 2-ஆங் கண்டம் முதலியன அடங்கிய நூல்	3	8
அமைதி யையம்பதென்னுஞ் சேந்தன் செந்தமிழ்	0	2
சண்முக சகச்சிரநாமார்ச்சனை	0	4
செவியறிவுறூஉ	0	1
ஷெ. காலிகோ பைண்டு	0	2
பாம்பன்: ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	0	8
ஷெ. சரித்திரம் காலிகோ	0	12

ஜோதிட நூல்கள்

	ரூ.	அ.
சர்வ சோதிட சஞ்சீவி ...	1	8
சிற்பநூற் பொக்கிஷம் ...	1	0
சோதிட பாராசாரியம் ...	0	12
உடுதசாபிரதீபிகை	0	12
வீமேசுர உள்ளமுடையான் 2-ம் பாகம்	1	0
வானசேகர சப்தசேனதீயம் ...	2	0
சோதிடக் கன்ம காண்ட மூலமும் உரையும்	0	6
ஜோதிட ஆசிரியனை 1, 2, 3, 4 பாகங்கள் தனித்தனி ...	1	0
அத்தா பலன்	1	0

வைத்திய நூல்கள்

	ரூ.	அ.
புலஸ்தியர் கற்பம் 300	1	0
அகஸ்தியர் பன்னிருகாண்ட வைத்தியம் 200	0	12
அகஸ்தியர் அமுத கலைக்கியானம்	1	4
அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360	0	12
இராம தேவரென்ற யாகோபு சுண்ண சூத்திரம் 155 ...	0	12
,, லோகச் செந்தூரம் 300-க்கு சூத்திரம் 150 ..	0	10
,, லோகச் செந்தூரம் 300 ...	0	12
,, பஞ்ச மித்திரம் 300 ...	0	14
,, வாத வைத்தியம் 300 ...	0	14
,, வாத சூத்திரம் 400 ...	1	4
,, தண்டகம் 100 ...	0	12
,, வைத்திய சூத்திரம் 150	0	10
,, வைத்தியம் 300 (மருந்து சுத்தியும் சாடி விவரமும்)	0	14
,, சுண்ணம் 600 ...	1	8
,, வைத்திய சிந்தாமணி 700	1	8
,, வைத்திய கல்லாடம் ...	1	4
,, சுண்ணம் 300 ...	0	14
சித்த வைத்திய அகராதி ...	2	8
திருவள்ளுவர் பஞ்சரத்தினம் ...	2	0
பதினென் சித்தர்கள் வைத்திய வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு	1	8
அகஸ்திய முனிவர் பூரண சூத்திரம்	0	12
இராம தேவர் சிவயோகம் ...	0	8
அகஸ்திய முனிவர் கற்பமுப்புக் குரு நூல் 100-ம் மனோன்மணி தீட்சை 100-ம்	0	12
கருவூரார் வாதகாவியம் 700 ...	1	0
சட்டைமுனிவர் ஞானம் ...	0	4
அகஸ்தியர் வைத்திய பூரணம் 205	0	12
நந்தீஸ்வரர் நிகண்டு	0	12
விஷ வைத்திய யாந்திரீக ஒன்பது விஷ ஆரூடம்	2	8
அகஸ்தியர் இரண வைத்தியம் 134 முறைகள்	0	12
அகஸ்தியர் நயனவிதி 1500 உடன் நாகமுனிவர் 200	1	4

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.

Registered No. M. 1500.

நவசக்தி

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு'　　　'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கக　　　ஸ்ரீமுக வரு கார்த்திகை மீ　　　பரல் க

கடல்

[சோதிடப்புலவர் - திரு. குருகுஹதாசப்பிள்ளை அவர்கள்]

(உரிமை ஆக்கியோருடையது)

OFFICE OF THE REGISTRAR OF ...
9-DEC 1933
MADRAS

தொக்கனி கடலே! தொக்கனி கடலே!
[1]பக்த மற்றதாய்ப் பார்ப்போ ரெவரையுஞ்
சிந்தை கலங்கிடச் செய்திடுங் கடலே!
நீனிற மதுவாய் நிறைந்து யாண்டும்
வானிற் றோன்றும் மஞ்சதை யொப்ப
ஏகமாய்த் தோன்றி யிருள்போல் விளங்கலா(ல்)
[2]கூடமாய் நிற்குங் குவலயத் தான்றோர்
[3]கடுவலென் றதனைக் 'கடலெ'ன் றனரோ?
படுகுழி யாழும் பகுதி நின்பால்
அடுத்தது பற்றி 'ஆழி' என் றனரோ?
விரிந்தும் பரந்தும் மெத்தவுங் கிடத்தலாற்
'பரவை' யென்றுனைப் பகர்ந்தனர் போலும்
பாரிடைப் படிந்தும் பாய்ந்தும் வளர்ந்தும்
வாருடன் செல்லும் வாரி யனைத்தையுந்
தன்னிடங் கொள்ளுந் தன்மை யதனால்
இந்நிலத் தாருனை யெழில்வாய் 'வாரிதி'
யாமென வழக்கி லுறைந்தனர் போலும்
வாமமாம் புனற்கால் வடிந்து மோடியும்
நின்பா லிறுதியாய் நிறைவதை யோர்ந்தே
அன்பால் நின்னை அறைந்தனர் சிந்(து)தென
வளைத்துஞ் சுழித்தும் மண்டல மதனை
அளைத்து நின்றே அனைத்தும் பற்றி
'நேமி' யென்றும் பேர்பட வாங்கே
[4]நாமித மனைய நலமேதார் 'சக்கரம்'
என்றும் பல்லோர் ஏத்துதல் கண்டாய்

குறிப்பு:—[1]பக்தமற்றது - கட்(கரை) யற்றது. [2]கூடம் - மறைபொருள். [3]கடு அல் - கள்ளிருள். [4]நாமிதம் - வளைவு.

நின்று புயல்தரு நெடுந்தாரை தனை
நின்பாற் சொரிய நீயு மதனைத்
தன்மாட் டடக்கித் தன்னின மாக்கலால்
வையத் தாருனை வாரின மென்றதை
மையறு கொண்டு 'வாரண' மென்றே
வருத்தன ரென்றதும் வழக்கி லொப்பாம்
இன்னவை போன்ற இன்னு மிதாமாந்
தென்படு மொழியாற் சிறந்து விளங்கித்
தெண்டிரை வீசித் திமிரிடுங் கடலே!
ஒண்மை செறிந்து ஒலித்திடுங் கடலே!
பேரொலி கிளப்பிப் பெருந்திரை யோடு
காரடுத் தன்ன ககன வழியாய்
நிரைநிரை யாக நிமிர்ந்துஞ் சுழன்றும்
வருதிறம் நோக்கில் "வன்மையில் என்னை
வெல்லுநர் எவரே வெல்லுநர் எவரே
சொல்லுதி" என்னச் சூசிப் பிப்பதாய்க்
காட்டியே நின்று கழறுத லொப்ப
நீட்டிய கரங்களால் நிமிர்ந்து நிற்பாய்
உறுமியுங் குருமியும் உருண்டுந் திரண்டும்
எதிர்திரை கொண்டே எங்கு முலாவி
விண்மிசை வீசும் வெண்டிரட் பரல்கள்
விண்மீ னென்ன விசும்பிடை காட்டுவை
வலைஞர் [1]பஃறியில் வாரிடும் மீன்கள்
மலையதை யொப்ப வானுற விளங்கல்
வெள்ளியங் குன்றென விளக்குவை யோர்பால்
[2]வள்ளிக் கொடிகள் வயமா யதன்மிசை
படிந்து கிடக்கும் பான்மையால் நீயும்
உடைப்புலி யாடையா னுப்பர் கோமான்
இடப்பா கமதாய் இலங்கு மெழிற்கணி
அம்மையை யொப்பா யதிரிடுங் கடலே!
செம்மையாய் நின்வழித் தேயங்கள் பலவாம்
பண்ட மனைத்தையும் பாங்கா யீட்டித்
தண்டா வுதவுந் தகையதாங் கலங்கள்[3]
நின்னிடங் கிடந்து நிமிர்ந்து தோன்றல்
மன்னிய ஆக்கம் வளர்க்குந் திறமாங்
[4]கடக மாமெனக் காட்டுவை யோர்பால்
கடும்விசை கொண்டு [5]கால்வழி பாயும்
மீனை றுடனே மிளிரும் வனப்புடன்
[6]வானே றதன்பின் வருதிறட் கொண்டல்
சேணிடை நிமிர்ந்துந் திகழற நின்றும்
[7]தூணெனக் காட்டுந் தூய்மை யதனால்
[8]செழியனு [9]முதியனுஞ் சேர்ந்துநிற் றல்போல்

குறிப்பு:—[1]பஃறி - படகு. [2]வள்ளி - சைவலப் பொதுப்பேர். [3]கலம் - மரக்கலம். [4]கடகம் - யானைக் கூட்டம். [5]கால்வழி - ஆகாய (காற்று) மார்க்கம். [6]வானேறு - இடி. [7]தூ[illegible]ன்று காணப்படுந்தூண் (கம்பம்) பனைமரம்போன்ற தென்க. [8]செழியன் - பாண்டிய[illegible] [9]உதியன் - சேரன்.

பழுதிலா வண்ணம் பகர்வை யோர்பால்
[1]மானிறங் கொண்ட வடிவாய்க் காணலால்
[2]வானிற் சிறந்து மண்டல மனைத்தையும்
ஒருங்கே யாண்ட உத்தம னெனப்
பெரியோ ரேத்தும் புலிக்கொடி வேந்தனும்
[3]வளவ னென்ன வழுத்துவை யோர்பால்
[4]தளவழி நகையார் தடங்கொள் புயத்திற்
தாங்குந் தாமந் தண்ணொளி சிறக்க
ஓங்கியே காட்டு முறுதிக் கிடனாந்
[5]தரளமுந் [6]துகிருந் தாங்கியே நின்று
சேர பாகந் தருவதும் நீயே
தனக்கெனை வாழாத் தன்மையாம் பெற்றியை
[7]முன்னவ னுனக்கு [8]மூவா வகையில்
வகுத்தன னென்றே வுளம்படக் காட்டுவான்
தொகுத்தே யொலித்துந் தொடர்ந்தே பிளிறியுங்
களிப்புட னுலாவுங் காரிருட் கடலே!
[9]சளிப்பிலா மனத்தொடு [10]சாலவே இன்னும்
மாந்தர் தமக்கு மாண்டரு பொருளை
ஆய்ந்து கொடுத்தே அளவிலாப் புகழைப்
போர்த்தியே நின்று புவிதனைப் புரந்து
ஆர்ப்பரித் தெங்கும் அலைஎறி கடலே!
தன்னல வேட்கையைத் தவிர்க்குந் தகையோய்!
நின்றனைத் திறனை நேர்படச் செப்பல்
நின்பாற் சாலும் நீர்த்துளி யளவெனக்
கருதியே அதனைக் கழற அஞ்சி
இறுதி யாக ஈண்டுடன் விடுத்தனன்.

குறிப்பு:—[1]மால் நிறம் - மானிறம் - கருநிறம்; மால் என்று சோழனுக்குமோர் பெருண்டு. [2]வான் - படை. [3]வளவன் - சோழன். [4]தளவழி நகையார் - முல்லையரும்பைப் பழிக்கின்ற பற்களையுடைய பெண்கள். [5]தரளம் - முத்து. [6]துகிர் - பவளம். [7]முன்னவன் - முழுமுதற் கடவுள். [8]மூவா - அழிவில்லாத. [9]சளிப்பிலா - சோர்வடையாத. [10]சால - மிகுதி. கடலினின்று மாகாயவழி துள்ளிக் குதிக்கின்ற மீன் கூட்டமும், திரண்டு நீண்ட மேகமும் முறையே பாண்டியனது மீனக்கொடியையும் சேரனது தாராம் பனையையும் குறிப்பா லுணர்த்தலால் பாண்டியன் சேரன் என்றுப தென்க.

நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனார்]

X

தியானம்

தியானம் என்பது சிந்தனை; சிறப்பாக ஆழ்ந்த சிந்தனை எனக் கூறலாம். நினைப்புகள் பலபலவாயின் அவை ஆழ்மை அடையா. நினைப்பு ஒன்றாவதும் நடிப்பதும் அமைதி நிலையில் உறும். அழிந்துபடும் அவனி இன்பிலும், நிலைபெறுப்பற்பல உலகப்பொருள் மீதும் மனம் மறுகி மருளாது, வேகங் கெட்டு அடங்கியபோது அமைதி அமிழ்தம் பிறக்கும். உலகப்பொருள், இன்பு இன்ன பொய், நிலையா எனுந்தேற்றம் பிறந்த பின்பே உள்ளம் அவைகளைப் போற்றாது அடங்கல் கூடும். ஆக மனம் உலகத்தின் மேற் செல்லாது அடங்கிய அமைதி நிலையில் சிறப்பாக ஒரு பொருளைக் குறித்து மாத்திரம் எண்ணும் ஆழ்ந்த சிந்தனையே தியானம் என்பது பெறப்படும்.

சிந்தனை உள்ளத்தில் எழுவது. உள்ளம் கற்பலகை; சிந்தனை அதிற் சித்திரிக்கப்பட்ட உரு. அப்பலகையில் வேறு ஒரு படம் அந்தம்பெற அமைக்கவேண்டில், எற்கனவே அதிற் பதிந்துள்ள கறைகளை அறவே அழித்துவிடுகிறோம். அது சுத்தமாக ஆகின்றது. பின் புதிய ஓவியத்தை அதில் வரைகின்றோம். சுத்தமான கற்பலகை போன்றது அமைதி நிலை; பின் அந்நிலையில் சிந்திப்பது தியானம்.

தியானம் நமக்குப் புதிதான ஒன்றன்று. காரணகாரியங்களை முறையுடன் சிந்திக்க அறிந்த ஒவ்வொருவரது மனத்திலும் அதன் இயல்கள் அவரவர் நிலைக்குத் தக்க முதிர்ச்சியுடன் படிந்துள்ளன. மக்கள் எத்தனையோ அரும்பெருங் காரியங்களை ஆற்றுகிறார்கள். அமைதி நிலையின் ஆழ்ந்த சிந்தனையின்றி ஒருவரும் அச்செயல்களை இயற்றி இருத்தல் முடியாது. சிந்தனை இன்றேல் காரியமில்லை; உலகம் இல்லை.

நாம் ஓர் அருங்கனி அருந்த ஆவல் அடைகின்றோம். அவ்வமயம் இறைபொழுது பிற எண்ணங்கள் யாவும் மறைந்து அமைதியும், அந்நிலையில் மனத்தில் மின்னல்போல் கனி எண்ணமும் உதிக்கின்றது. பின் அதைக் குறித்த சிந்தனையும் அதன்வழி அதை அடையும் மார்க்கமும் பிறந்து, நாம் முடிவில் அதை அயிர்க்கின்றோம்.

மனத்தில் அமைதியும் சிந்தனையும் எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஆயினும் இவைகளின் கால அளவை நிலைபெறும் நேரம் மிகமிகக் குறுகி இருத்தலால் அந்நிலைகளது உண்மையை நாம் ஓர்வில்லை. நாம் அறிந்தாலும் அறியாவிட்டாலும், அமைதியும் அதன் பின்வரும் எண்ணமுமே நாம் செய்யும் எல்லாக் காரியங்கட்கும் காரணம். நமக்கு வரும் இன்ப துன்பம், அமையம், நிகழ்ச்சி இன்னவை நாம் அமைதியிற் சிந்திக்கும் நினைவுகளால் நுண்மையிற் கருவுற்றுப் பின்பே பருமையில் மலர்கின்றன. எண்ணத்தின் முதிர்ச்சியே மனிதன்.

தியானத்தின் தன்மையை உணர்ந்து அமைதியையும் பின் ஒன்றை மட்டுமே- நமக்கு வேண்டிய நிலையைப்பற்றி மட்டுமே சிந்திக்கும் தியானப் பழக்கத்தைப் பயின்று விட்டோமாகில், நமது வாணாளைப் பண்செய்ததாகும். நம்மிடம் கட்டுப்படாமல் தானே ஏற்படும் நமது சிறிய சிந்தனையே எல்லாக் காரியங்கட்கும் விதையாகுமானால், நாம் அறிந்து அச்சிந்தனையை அடக்கி ஆழ்மையுடைத்தாகச் செய்வதால் எத்துணை அரிய செயல்களை ஆற்றி முடிக்கலாம்? நமக்கு வேண்டியனவற்றைத் தோற்றுவித்து நாம் இன்பமடைய ஒரு நவசக்தி - ஆக்கும் சக்தி (Constructive force) தியானத்தின் வழிப்பிறக்கின்றது.

நீரின் குமிழி உலக இன்பே நமது குறிக்கோளாக மதித்து, சிந்தனைத் திறனால் சீக்கிரம் அழிந்துபடும் இவ்வின்பைத் தோற்றுவிக்க முயலல் விழலுக்கிறைத்த நீர்போல் ஆகும். எந்த ஒரு பொருளைப் பெற்றபோது நாம் என்றுங்கெடா இன்பம் பெறுவோமோ, அப்பொருளை அடையும் பொருட்டுத் தியானத்தின் வழி உழைப்பதே சாலச் சிறப்புடைத்து. எக்காமதேனுவை நாம் அண்டியபோது நமக்கு ஈண்டு என்ன வேண்டுமோ அத்தனையும், நமது உயிர் கூர்தற்கு இன்றியமையாத சாதனங்கள் யாவற்றையும் அடைவோமோ அச்சிறந்த ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்தல் சாலவும் நன்று.

அச்சீரிய பொருள் இறை என்று சொல்ல வேண்டுவதில்லை. இறையுள் நாம் வதிகின்றோம்; எண்ணுகின்றோம்; தொழிற் படுகின்றோம். அவன் நமக்கு இருப்பு, உடல், உணர்வு, அனுபவம் இன்ன நல்கி இருக்கின்றான். பருக நீரும், உயிர்க்கக் காலும் குறைவற யாண்டும் நிறைத்திருக்கின்றான். உலகில் உயிர்வாழ இன்னும் வேண்டுவன சோறுங் கூறையுமே. இவைகளும் நம் பொருட்டு இறையுள் இறையினால் தோற்றுவிக்கப் படுபவையே. இக்குறிகளைமட்டும் விழைந்துவருந்தி உழைத்து உயிர் நடாத்துவது அறிவின் பாற்படாது. இவை குறிக்கும் இறையையே தியானத்தின் குறிக்கோளாகக் கோடல் சிறப்பாகும்.

ஆண்டவன் முழு அறிவினன் ஆதலான் ஈண்டு நமக்கு வேண்டுவது என்ன என்பதை அவன் நன்கு உணர்வான். அவனை அடைந்து கேட்டால் நாம் வேண்டுவன யாவும் குறைவறக் கொடுக்கப் பெறுவோம். சொல்லப்போனால் கேட்கவும் வேண்டுவதில்லை. அவனை அடைந்ததும் நமது நன்மைக்கு அவசியமானவை யாவும் தாமே வந்தெய்தும். ஆராயின், நன்மை புதிதாக உண்டாவதில்லை. அவனே நன்மை நிறைவு எல்லாமாக, அவனை உணர்ந்து அடைந்ததும் நாம் இவைகளை அனுபவிக்கலாம்.

'Seek ye first the kingdom of God and every thing shall be added unto you.'

"இம்மையே தருஞ் சோறும் கூறையும்
...அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

"வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ"

"வேண்டுவார் வேண்டுவதே
ஈவான் கண்டாய்"

இன்ன அருள் மொழிகள் ஈண்டு உன்னற் பாலன.

மன்பதையில் நாம் அறிந்தவற்றுட் சிறந்தவன் மனிதன். அவனிடம் சென்று ஆசிப்பதால் என்ன பயன்? வரம்புடைய அவனுக்கு நல்குந்திறன் உண்டாகில் அவன் வழங்கும் நன்மையும் அவனைப்போற் கடிதிற்கெடும் என்பது வெள்ளிடைமலை. என்றுமுள்ள இறையே அழியா நன்மை வழங்கும் திறன் உடையவன். உலகில் உள்ளது இவ்வொரு சத்தியே. உலக உணர்ச்சியுடைய நமக்கு நன்மை தரும்படி இச்சத்தியை வேண்டுவதால் - பிரார்த்தித்தலால்(Prayer)மட்டுமே நாம் அழியா நன்மை எய்தலாம். பிரார்த்தனையும் பல் திறத்தன.

நுட்பம் அறியாதோர் "சாமி ஆண்டவனே! எனக்குப் பொன் நல்கு; நன்னிலை வழங்கு" என[illegible] கண்ணீருகுத்து இரந்திரந்து அழுதல் ஒன்று. இக்கடையாவாரது வேண்டுகோளும், அவர்களை உலகினின்றும் இறைபால் திருப்புதல்பற்றி நன்மையே யாகும். இவ்வேண்டுதலினின்றும் "தமக்குப் பொருள் இல்லை, நன்னிலைமை இல்லை" என்று எண்ணும் அவர்களது இன்மை மனப்பாங்கு தெரிக்கின்றதே யன்றி, அதனால் உடனே ஒரு சிறிதும் நன்மை விளைவதாகத் தோன்ற வில்லை. இத்தகைய பிரார்த்தனையினின்றும் இறை ஒருவனே நன்மை தரவல்லவன் என்று

அவர்கள் நம்புகின்றமை போதரும். இந்நம்பிக்கையே அவர்களது வாழ்வில் வந்துற்ற நற்றிருப்பம் (Turning point.)

உயரிய நிலையி லுள்ளவர்கள் இது வேண்டும் அது வேண்டும் என்று இரங்கி இரங்கி ஓலமிடுவது அறிவீனம் என்று உணர்கின்றார்கள். இறைவன் அருளாளன் என்றும் அவன் நமக்கு வேண்டியதெல்லாம் குறைவற நல்குகின்றான் என்றும் அறிகின்றார்கள். நிகழ்வனயாவும் தமது நன்மைக்கே என்று உணர்வதால், அவர்களது துதிகள் யாவும் நன்றியறி வந்தனைகளாக வந்தமைகின்றன. ஆண்டவன் தமக்கு நல்கியுள்ள நன்மைகளை நினைத்து நினைத்து, அவனது அருட்டிறத்தை உன்னி உன்னிக் கரைந்து, தங்களது நன்றியறிதலை இறைவனுக்குணர்த்துகின்றார்கள். இன்னவரது தோத்திரப் பாக்களிற் சிலவற்றை ஆராய்வுழி, அவர்களது மனதில் இன்மை எண்ணங்களே இல்லை என்பதையும், செய்நன்றிமறவா அவர்களது உள்ளம் அழலின் மெழுகெனக் கரைந்துருகி அத்துதிகளினூடே பாய்ந்து ஓடிக்கொண்டிருப்பதையுங் காணலாம்.

அன்னவர் எவ்வத்தடந் திரையால் எற்றுண்டு இன்னல் அடையலாம். அக்காலத்தும் ஆண்டவனைக் கைதந்து காக்குமாறு இரங்கிக் கலுழ்தலொழித்து, அவர்கள் ஆண்டவன் அவ்வமையத்து எவ்வுதவி தரக்கூடுமோ அதைத்தானே அளிக்கின்றான் எனவும், அவ்விடரும் தமது முன்னேற்றத்திற்கு அவசியமாய் இருத்தல் வேண்டுமென்றும் உணர்ந்து, வந்ததுன்பத்தைப் பொருட் படுத்தாது, எல்லாம் அவன் அருள் என்று அவனை வழுத்திக்கொண்டு அன்பால் இளகிய தமது உள்ளங் கலங்காது ஒழுகா நிற்பர்.

"மாயவற் கோர் பரமாய மூர்த்தி யவனே
நமக்கோர் சரணே"

என்றும்,

"தன்னையடைந்தார் வினைதீர்ப்ப தன்றோ
தலையாயவர் தங்கடனாவது தான்"

என்றும்,

"கெடிலப் புனலுமுடையார்
ஒருவர் தமர் நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை"

என்றும்,

"நீ மறந்தாய் எனினும்
அகில மெலாமளித்திடும் நின்னருள்
மறவா தென்றே இன்னுமிகக்
களித்து இங்கே இருக்கின்றேன்"

என்றும், மலையே பெயர்ந்துவரினும் சிறிதும் சலியா நெஞ்சில் மகிழ்வுடன் அவர்கள் கொண்ட நோக்கமும் மிகக் கடிதில் பரிசில் அளிக்கப்படுகின்றது. உற்ற தீங்கும் பெரிய ஒரு நன்மை பிறப்பதற்குக் காரணமாகவும் முன்னோடியாகவும் அமைவதை அனுபவத்தில் அவர்கள் சீக்கிரம் உணர்கின்றார்கள். இவர்களது வழிபாடு இத்திறம்.

தெய்வ வழிபாடுகள் யாவற்றினும் தலையாயது தியானம். ஆண்டவனது அரும் அருட் குணங்களை இடையறாது உள்குவதால் நாமும் அவனைப்போல் சீரிய பண்புகள் வாய்க்கப் பெறுகின்றோம்.

"By meditating quietly upon God we become changed, for the effect of meditation is to change us unto the likeness upon which we meditate. (*The Shrine of Love by H. T. Hamblin.*)

இன்னும் உயரிய நிலையிலுள்ளவர்கள் இவ்வுலகக்கட்டினின்றும் விடுபட்டு மேற்பரந்து இறைவனை உணர்கின்றார்கள். தெய்வ வழிபாட்டின் முதிர்ச்சியாகிய சமாதிநிலையினது (Contemplation) உணர்ச்சிகளை, மாற்ற மனங் கழிந்த நிலையின் அனுபவங்களை மொழிவடிவிற் பகரல் ஒண்ணாது. இதை இப்போது நினைப்பதாற் காரியம் சிறிதும் இல்லை. இந்நிலையைக் கூட்டுவிக்கும் தியானமே நமது சிந்தனை.

இவ்வுலக அறிவுடன் நாம்செய்யும் தெய்வ வழிபாட்டிற் சிறந்தது தியானம். உன்னுங்கால் தியானமே எல்லாவிதமான தெய்வ வழிபாட்டின் ஊடே ஓடும் முக்கியமான சாரம் என்பது விளங்கும். தெய்வ வழிபாட்டால் மட்டுமே மனிதன் சிறப்படையக்கூடும். சாதாரணமாக, சிவபூசை நித்திய கருமங்கள் இயற்றுதல், இறையுறையில் புகுந்து அபிடேக அருச்சனைகள் செய்வித்துப் பிரசாதம் பெற்றுக் கொள்ளுதல், நோன்புகள் நோற்றல் இன்னவும் பிறவுமே தெய்வ வழிபாடு என்பது மக்களது பொதுவான - தவறான - எண்ணம். இவைகளது ஆழ்ந்த உட்கருத்தையறியாது மக்கள் பெரும்பாலும் ஒழுகுகின்றபடியால், அவர்கள் "புறஞ்சுவர் கோலம்" செய்பவர் ஆகின்றனர். நடவடிக்கையில் மிகக்கொடிய காரியங்களைப் புரிந்துவிட்டு, அதற்குப் பரிகாரமாக இவைகளைச் செய்துவிட்டால் தாம் செய்த குற்றங்கள் நீங்கிவிடும் என்று எண்ணும் மாந்தர் எண்ணிலர். இது உலக்கையை விழுங்கிச் சுக்கு வெள்ளம் அருந்துவ தொக்கும். இக்கட்டுகள் யாவும் எக்காரணம் பற்றி ஏற்படுத்தப்பட்டுள்ளனவென்று மனிதன் சிந்திப்பதில்லை. இவையாவும் கீழ் நிலையில் உள்ள மக்கட்குத் தெய்வம் ஒன்று இருக்கின்றது என்று அறிவு கொளுத்தற்காக ஆதல் வேண்டும். இங்ஙனவு பின் வேறன்றி, மனிதனுள் ஆழ்ந்த இறை சிந்தனையைக் கிளப்பலாம். அவனை அடைதலால் வரும் சொலற்கரிய பெரும் நன்மைகளைப் பற்றியும், அவனை அடையும் துறைகளைப் பற்றியும், உண்மையான வழிபாடு என்ன என்பதைப் பற்றியும் பின் அறிந்து கொள்வதற்குரிய சிந்தனை முளைத்து வளுக்க இஃது ஒருவிதை ஆகும். அவ்விதசிந்தனை சிறக்கப் பெற்ற மகன் பின் கோயில் முதலியவற்றிற் போய்ப் புறவழிபாடு ஆற்ற வேண்டுவதில்லை என்றும், அகவழிபாடே சாலச்சிறப்புடைத் தென்றும், ஒருவனும் இவ்வக வழிபாடின்றி இறையை உணரல் முடியாதென்றும் அறிந்து கொள்வான்.

புண்ணியநதிகள், கோயில்கள், அவைகளிற் குழுமியுள்ள உருவங்கள் ஆதியன மனிதனுக்கு இவ்வுணர்ச்சியை அளியாமற் போகுமாகில் இவைகளால் ஆயபயன் என் ? சாதாரணமாக "நாம் அறிவு கூரியோம்; நூற்களின் அகன்கரை கண்டோம்" எனத் தம் பெருமைப் பறைசாற்றும் பலர் கூட கோயிலுக்குப் போவது, தரிசனம் செய்வது இவைகளை வெறும் காலப் போக்குக்காகக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறக்காரணம் இல்லாமலில்லை. அக்காலங்களிலும் அவர்களது மனதில் இறை எண்ணம் சிறிதும் தவழாது, புன்மை எண்ணங்களே சிறந்திருக்கின்றன என்பதை எத்தனையோ தடவை நாம் அனுபவத்திற் கண்டிருக்கின்றோம். தீப ஆராதனை ஆகும் போது அவர்கள், தமக்குத்தாம் அத்தரிசனம் உரித்து என்று எண்ணி, மறைத்துக் கொண்டு நிற்பவர்களை "விலகு விலகு" என்று தங்களது கோபக்கனலைக்கொட்டிக் கூக்குரல் எழுப்புவதையும் நாம் பன்முறை கண்டிருக்கின்றோம். அத்தரிசனமே கிடைத்தற்கரிய பொன்னுலகளிக்கும் தரிசனவேதி என்று அவர்கள் அறியாமையினாற் கொண்ட எண்ணம் வியக்கத் தகுந்தது. மற்றுஞ் சிலர் ஆன்மார்த்த பூசைகள் செய்யுங் காலத்திற்கூட யாரையாவது திட்டிக் கொண்டும், அல்லது அங்குள்ளோருடன் உரையாடிக் கொண்டும், இடையிடை பிதற்றும் மந்திரங்களைக் கோபக் குருதியில் நனைத்து நனைத்து அள்ளி வீசித் தங்களது தெய்வ வழிபாட்டை முடித்து விட்டதாக மதிக்கின்றனர். இவர்கள் தாம் இயற்றுவன என்ன என்றும், அவற்றை எதற்காகச் செய்கின்றோம் என்றும் உணர்ந்தவர் ஆகார். இவர்களது அறியாமையே, பலர், கோயில், அதில் நடைபெறும் வழிபாடு இன்னபிறவற்றைத் தூஷிக்கக் காரணமாகவும் ஆகின்றது.

"வேதம் ஓதில்என் வேள்விகள் செய்கில்என்
நீதி நூல்பல நித்தல் பயிற்றில்என்
ஓதியங்கம் ஓராறும் உணரில் என்
ஈசனை உள்குவார்க் கன்றி இல்லையே."

"நன்று நோக்கில் என் பட்டினியாகில்என்
குன்றம்ஏறி இருந்தவம் செய்யில்என்
சென்று நீரிற் குளித்துத் திரியில்என்
என்றும் ஈசன் என்பார்க்கன்றி யில்லையே"

இக்காரியங்களைச் செய்யும் போது மனம் சுத்தமாய் இறை எண்ணங் கொண்டு இருக்க வேண்டுமே யொழிய, வெறும்புறக் கோலங்களோடு நின்று விடுதலாற்பயனில்லை. இப்புறக் கோலங்கள் வழிபாடாகா.

"கைபுனை கொண்டு கோவில் புகும் போது நினது சோதரன் ஒருவன் இழைத்த இன்னா நின்மனதில் நிற்குமாகில், கொண்டு வந்தவைகளை மேடைக் கணித்தே வைத்து விட்டு, திரும்பி வழியே ஏகுக. அச்சோதரனுடன் சமாதானமாகிய பின்னர் திரும்பி நினது காணிக்கையைச் செலுத்துக." என்ற ஏசுநாதரது கூற்று, நாம் அப்புற வழிபாட்டைச் செய்யும்போது நமது மனநிலை எப்படி இருத்தல் வேண்டுமென்று உணர்த்துகின்றது.

மெய்த் தெய்வ வழிபாடு; இறைவழிபடுதல்; அவன் எவ்வழி இயங்குகின்றானோ அவ்வழி நாமும் இயங்கல்; இயற்கைச் சட்டங்களது போக்கின்படி நாமும் நடத்தல். எல்லாவித இயற்கைச் சட்டங்களையும் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கும்போது, அன்பு எனும்தெய்வ இயல்பின் விரிவாகக் காணலாம். நாம் எண்ணும் ஒவ்வொரு நினைப்பும், இயற்றும் ஒவ்வொருகாரியமும், அன்புஎனும் வாய்க்கால் வழிப்பாய்ந்து கொண்டிருத்தல் வேண்டும். அவ்வழி நாம் ஒழுகும் போது தனக்கென வாழாமை, பயன் கருதாப்பணி, மன்னிப்பு, ஒப்புரவு, ஒற்றுமை இன்னபிற நல்லியல்கள் நம்மிடம் படியும். அன்பே இறை. ஆகவே, அதைக் கடைப்பிடித்து வாழ்தலே மெய்யான தெய்வ வழிபாடாகும்.

அமைதி நிலையிற் கூடும் தியானத்தில் நாம் அருட் கடவுளது நல்லியல்களைச் சிந்திக்கச் சிந்திக்க அவ்வியல்புகள் நமக்கு விளங்கிக் கொண்டே போகும். நமது எண்ணமே நாம் ஆதலால், நாம் அருளுருவம் அடையும் நாளும் அணித்தே வரலாம். நம்முடைய எண்ணமும் செயலும் அன்பு தழைக் கொண்டு வந்தபோது நாம் இறைவழிபட்டவர் ஆவோம்.

இறைவன் "ஒருவனாகி நின்றான் இவ்வுலகெலாம். இருவராகி நின்றாகட் கறிகிலான்"; இப்பிரபஞ்சம் முழுவதும் அவனுடைய பரிணாமம். நாம் வேறு இறைவேறு என்று வேற்றுமை உணர்ச்சி உள்ளவர்கட்கு அவன் அகப்படான். அவன் மாற்ற மனங்கழிந்த இடத்திற் பிறங்கும் தனிப்பொருளாகையால், அவனை அந்நிலையினின்றே உணர வேண்டும். புறக்கோலங்கள் மட்டும் மிகப்பூண்டு, மனதைமறித்து மடக்காது மேன்மேலும் ஓடிக்கொண்டிருக்க விட்டுப் பருநிலையில் இயற்றும் கோயிலேகல், புண்ணிய நீராடல், யாத்திரை போகல் இவைகளாற் பயன் என்னை! மன ஓட்டம் உள்ளபோது - "நான்" என்ற ஓர் எண்ணம் நிற்கும் போது - இறைவேறு நாம் வேறு என்று மாறுபட்டு எண்ணுகின்றோமாக. இந்நிலையில் இறை ஒளியை நாம் உணரோம். "நான்" எனும் நினைவு "எல்லாம் அவனே" என்ற எண்ணத்திற் கரைந்து மறைந்து, மோனநிலை (Silence) கூடிய போது தான் அவ்வொளி - அன்பின் மாட்சி - நம்மீது படரல் ஆகும். இவ்விதநிலை தியானத்தின் வழிதான் கைவரல் கூடும். பற்பல எண்ணங்களை எண்ணும் மனம் ஒன்றை மட்டும் சிறப்பாக எண்ணப் பழகுவதும், பின் அவ்வொரு நினைப்பும் அறுந் தொழிந்து மோனநிலை கூடி இறையுடன் ஒன்றுவதும் தியானத்தின் வழியே கைவரப் பெறும்.

தியானம் அமைதி நிலையின் ஆழ்ந்த சிந்தனை என்றும், அது, நாம் அறியாது செய்யும் எக்காரியங்கட்கும் காரணமாக நமது மனதில் எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒன்று என்றும், அதை உணர்ந்து கைவரச் செய்த காலை அதனின்றும் அரும் பெருங்காரியங்களையும் எளிதில் இயற்றற்குரிய ஒரு நவசக்தி பிறக்கின்ற தென்றும், அம்

யும் உலக இன்பைத் தியானப் பொருளாகக் கொண்டு அதைத் தோற்றுவிக்க உழைப்பது வீணாதலால், என்றும் நிலைபெறும் இன்பம் பயக்கும்-வேண்டிவன முற்றும் நல்கும் - அன்புத் தெய்வத்தையே தியானத்தின் குறிக்கோளாகக் கொள்வது சிறப்பென்றும், இன்பவாழ்விற்கும் உயிர் கூர்தற்கும் ஆக்கமளிக்கும் உண்மையான தெய்வ வழிபாடு-இயற்கையுடன் இறையுடன் ஒன்றல் - தியானத்தின் வழிப்பெறப்படும் என்றும் நாம் நன்கு உணரல்வேண்டும்.

இப்பயிற்சியைச் செயப் புகுங்கால் இருக்கவேண்டிய நமது உடல் நிலை, அதற்குரிய காலம் இடம், இருப்பு, மனநிலை இன்ன பிறவற்றை இனித் தெளிதல் கடனாம்.

தயானந்தர்

[திரு. கி. சுப்ரமண்யனார்]

(பேரறிஞர் வாஸ்வானி அவர்கள் நிகழ்த்திய பேருரையின் தமிழாக்கம்)

பல்லாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் தீர்க்கதரிசி ஒருவர் தோன்றினார். அவர், அன்பே பூத்து, அறிவே காய்த்து, அருளே கனிந்த அருங்கலை விநோதர்; ஆண்டு பலவாக வனத்தினுறைந்து, வற்கலைபூண்டு, மனத்தை யடக்கிக் கடுந்தவம் புரிந்த உத்தமர். மாநிலத்துறையும் மன்பதையினர் அறியாமையாகிய இருளிடைக் கிடந்து உழல்வதைக் கண்ணுற்ற அப்பெரியார் பல இடங்களுக்குச் சென்று மக்கள் யாவரும் இன்புற்று வாழத் தம்மாலியன்ற தொண்டாற்ற விழைந்தார். ஒருநாள் அவர் அண்மையிலுள்ள ஓர் அணிநகர்சென்று ஆண்டுக்குழுமியுள்ள மக்கள் முன்னர்த் தமது கருத்துக்களைக் கூறி விளக்கியபோது அவர் குறித்த மணிவாசகம்:—"நின் அகக்கதவினைத் திறந்திடுக" என்பதாம். அவ்வாறு குறிக்கக்காரணம் என்னையோவெனின், தற்காலக் கல்வி நிலைமைப்பட்ட நெறியில் இயங்குவதாகலின் என்க. தற்போது மக்கள் பயிலும் கல்வி மனோவுணர்ச்சியைத் தூண்டி இருதயத்தில் அறிவுச் சுடரொளிரத் துணைபுரியாது. அகத் தூய்மை பெற்றாலல்லது அறிவுச்சுடர் ஒருவர்க்கு உண்மையில் கைகூடாது.

யான் இக்காலை கூறிவரும் பெரியாரின்—மகரிஷியாம் தயானந்தரின்—உயரிய உள்ளத்தில் சதா ஆன்ம ஜோதி இரண்டறக் கலந்து ஒளிரா நின்றது. தயானந்தர் ஆங்கில மொழியில் ஒரு வார்த்தையேனும் அறியார். எனினும் அவர் அறிவின் உறைவிடமாய் விளங்கினார். நம்மைவிட அவர், பன்மடங்கு சீரிய அறிவு பெற்றவர். நாமோ ஆங்கிலங் கற்ற செருக்கினால் இறுமாந்து நம்மை மறந்து ஏழைமக்களைக் காலால் மிதிக்கின்றோம்; அகங்காரமென்னும் அரக்கன் வாய்ப்பட்டு, இந்திய வாழ்வின் இலட்சியத்தினின்றுந் தவறி அப்பால் வீழ்ந்து பட்டவராகின்றோம். நாம் கற்றுவருங் கல்வியும் போலிக் கல்வியே யாகும். போலி, என்றும் அழிவெய்தல் திண்ணம். அதற்கு உலகிடை மதிப்பேது? புகழேது? இல்லையன்றோ! எனவே, போலியே பலவீனம்; போலியே வெளிவேடமெனக் கூறின் மிகையாகாது.

தாயென வொளிரும் தயானந்தரை யான், ஒரு மகரிஷியாக, ஜனசமூகத் தலைவராக, பேராற்றல்படைத்த தீர்க்கதரிசியாகக் கொள்கிறேன்; அப்பெரியாரின் திருவடிகளைப் பணிகின்றேன். சக்தியாலேயே - ஆற்றலினாலேயே - உங்கட்குப் பாராளுமன்றினையும் நிறுவவியலும். தயானந்தர் இளஞ்செம்மல்

களுக்கு விடுத்துள்ள செய்தி யாதெனின்:—

"எழுங்கள்! தூக்கத்தினின்றும்!
எழுங்கள்! முன்னேறுங்கள்!
ஆற்றலுடை மக்களாய்த் திகழுங்கள்!
தொண்டாற்றுங்கள்! வீண்பலாத்காரத்தை
விட்டொழியுங்கள்"

என்பதாம்.

தீவிர வாதியர் ஆற்றலுடை மக்களாகார். போகநெறி ஒருவரது ஆக்கத்திற்கு ஊறுசெய்யும். உண்மைச் சக்தியாளர் என்றும் எளிய வாழ்வையே மேற்கொள்வர். ஆனால் தற்கால வாலிபர் மேனாட்டு நாகரிகத்தையும், சிற்றின்பங்களையுமே பெரிதும் விழைகின்றனர். ஆற்றலைப் போகநெறியினாலடைய வியலாது; பிரம்மச்சரியத்தால் அடையலாம்; சிற்றின்பங்களினால் எய்த முடியாது; ஆனால் தன்னடக்கத்தினால் பெறமுடியும். பிரம்மச்சரிய நெறியின் விதிகளைக் கடைப்பிடித்தொழுகும் - உண்மைத் தொண்டாற்றும் இளைஞர்களே சக்தியிழந்த - ஆற்றலிழந்த - இந்தியாவின் விடுதலை காண்பவராவர். நம்மகத் தொளிரும் ஆக்க சக்தியைப் போற்றுதவரையில், நாம் உண்மையில் தன்மதிப்பை இழந்தவர்களாவோம். அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஏழை மக்கட்குச் செய்யும் நற்பணியே சமயப் பணியாகும். அத்தகைய தொண்டாற்றும் சமயமே உண்மைச் சமயமென ஈண்டுக் குறிக்கின்றேன்.

தயானந்தரின் பதின் கட்டளைகள்

௧. அறிவனைத்திற்கும் மூலகாரணமாயிருப்பவனும், அறிவால் விளங்கும் எல்லாமாயிருப்பவனும் பரமேசுவரனே.

௨. கடவுள், என்றுமழியாத, அறிவுமயமான, ஆனந்த வடிவான பரம்பொருளாவார். அவர் உருவில்லாதவர்; யாவும் வல்லவர்; சத்தியக் குன்று; கருணை வள்ளல்; பிறப்பிறப்பில்லாதவர்; மாற்றமில்லாதவர்; ஆதியந்தமில்லாதவர்; ஒப்புயர்வில்லாதவர்; சர்வரட்சகர்; உலகின் தலைவர்; யாண்டும் நீக்கமற நிறைந்தவர்; இயற்கையானவர்; மூப்பில்லாதவர்; அழிவில்லாதவர்; அச்சமில்லாதவர்; என்றுமுள்ளவர்; புனிதமானவர்; யாவையும் படைத்தவர்.

௩. வேதங்களே உயரிய அறிவைப் புகட்டும் உண்மை நூற்கள். அறிவுடை ஒவ்வொருவரும் அவற்றை நன்கு பயில்வாராக; பிறர்க்குப் போதிப்பாராக.

௪. என்றும் சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகுக. அசத்தியத்தை விட்டொழிக்க.

௫. எவ்வினையையும் அதன் நன்மை தீமைகளை நன்கு சீர்தூக்கி உண்மை நெறி நின்று வழுவாது ஆற்றுக.

௬. பொது வுலகிற்கும், ஆன்மவுலகிற்கும், மக்கட் சமுதாயத்திற்கும் சீரிய நன்மை பயக்கின்ற வினையாற்றுவதையே நின்குறிக்கோளாய்க்கொள்க.

௭. அன்பு, நீதி, சத்தியம் ஆகிய இம்மூன்றையுங் கடைப்பிடித்து யாவருடனும் என்றும் ஒரே படித்தான முறையில் ஒழுகுக.

௮. நின்மாட்டுள்ள அஞ்ஞானத்தை ஒழித்து அறிவைப் பெருக்குக.

௯. நினது தனி ஆக்கத்திலேயே திருப்தியடைந்து நின்றுவிடாது, ஜனசமூகத்தின் ஆக்கமே நின்தன் ஆக்கம் என்பதைக் கடைப்பிடித்துப் பணியாற்றுக.

௧௦. நின்னல ஆக்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு உழைப்பதோடுகூட மக்கட் சமுதாய ஆக்க விதிகளுக்குங் கட்டுப்பட்டுத் தொண்டாற்றுவையேல் நீ விடுதலை பெறுவது உறுதி.

தொல்காப்பியத்துப் புறத்திணையியலின் முதற் சூத்திரம்

[திரு. பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார், M.A., Ph.D., L.T.]

தற்போது காணப்படுகின்ற தொல்காப்பியப் பதிப்புக்களில்,

"அகத்திணை மருங்கி னரிறப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்று மீரேழ் துறைத்தே"

என்பதே முதற்சூத்திரமாக உளது. அதன் பொருள் 'அகத்திணை யிலக்கணத்தை நன்கு உணர்ந்தோர் புறத்திணை யிலக்கணம் கூறப்புகின், வெட்சி என்ற புறத்திணை குறிஞ்சி என்றஅகத்திணைக்குப் புறனாகிப் பதினான்கு துறைகளைக்கொண்டதாகும்' என்பதாம். அவ்வாறாயின் புறத்திணை யாவை என்பதூஉம், அவை எத்துணை வகைப்படும் என்பதூஉம் கூறப்படாவனவாகும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் எனப் புறத்திணை எழுவகைப்படும் என்று கூறாது முதற் சூத்திரத்தில் வெட்சியின் இலக்கணத்தைக் கூறுதல் தவறாகும். வெட்சி என்பது முற்சூத்திரங்களால் விதிக்கப்பட்டிருப்பினன்றோ அதனை உத்தேசித்து அது குறிஞ்சிப் புறனாகுமென்றலும், அது பதினான்கு துறையைப் பெறுமென்றலும் விதிக்கப்பட்டனவாகும். சூத்திரத்துள்ள முதலிரண்டடிகளின் பொருளுக்கும், இறுதியிரண்டடிகளின் பொருளுக்கும் இயைபு நேரிதாகத் தோன்றவில்லை. அன்றியும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், அகத்திணையியல் இவற்றின் முதற்சூத்திரங்களை *நன்கு நோக்கின் அவை முறையே எழுத்து யாவை எத்துணைப் படுமென்றும், சொல் உயர்திணை அஃறிணை இவற்றில் கிடைக்குமென்றும், அகத்திணை கைக்கிளை முதலாய்ப் பெருந்திணை யிறுவாய் எழுவகைப் படுமென்றும் கூறுகின்றன. அன்றியும் வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் இவை எவற்றின் புறனாகுமென்பது,

வஞ்சி தானே முல்லையது புறனே
—புறத். 6

உழிஞை தானே மருதத்துப் புறனே
—புறத். 9

தும்பை தானே நெய்தலது புறனே
—புறத். 14

வாகை தானே பாலையது புறனே
புறத். 18

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
புறத். 22

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே
—புறத் 25

என்ற தனிச்சூத்திரங்களால் உணர்த்தப்பட்டது.

---

*1. எழுத்தெனப் படுப
அகரமுத னகர விறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே
—(எழுத். 1.)

2. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன் சொல்லே
—(சொல். 1.)

3. கைக்கிளை முதலாப்
பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப
—(பொருள். 1.)

ஆகலின் அகத்திணையியலின் முதற் சூத்திரம்,

"அகத்திணை மருங்கி னரிறப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணக் திறப்படக் கிளப்பின்
வெட்சி முதலாப் பாடா ணிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப"

என்றும், இரண்டாஞ் சூத்திரம்

"வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்று மீரேழ் துறைத்தே"

என்றும் இருந்திருத்தல் வேண்டுமென்பது என் கருத்து. அவ்வாறு சூத்திரங்கள் சிதைந்திருத்தல் கூடுமோ வென்ற ஐயத்தை உரையாசிரியர் அகத்திணையியல் 45-ஆவது சூத்திரவுரையிற் கூறிய 'தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழமையாற் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும்' என்ற சொற்றொடரால் போக்குகின்றனர்.

காதலும் சாதலும்

[திரு. கா. நயினார் முகம்மது]

காதல் என்பது அன்பராயினார் இருவரிடத்தே தோன்றும் உள்ள உணர்ச்சி. அது, பன்மரஞ் செறிந்த நன்மலைச் சாரலில் உள்ள இளமரக்காவிலே, தேனருவியிற் றிளைத்து வருந் தென்றல் செவ்வியவின்பத்தை யளிக்கவும், முல்லை மணமும் மல்லிகை நாற்றமும் முறை முறை வீசவும், பழுத்து முதிர்ந்த பயனுடைக்கனிகள் பரிந்து வந்த தனக்கு விருந்தளிக்கவும், மயில் ஆடவும், குயில்பாடவும் கண்டுஇயற்கை யன்னையின் எழிலில் மனதைச் செலுத்தி ஆயத்தைப் பிரிந்து நின்ற அழகிய தலைவியும், வில்லும் அம்பும் கைக்கொண்டு வேட்டை வயத்தனாய்ச் சென்ற விளங்கெழிற் குரிசிலும், இயற்கை இயைப்பதான், ஒருவரை யொருவர் காணும்போது, பிறற்கிவ்வா றெனக் கூறப்படாததாய் அன்னாரின் அழகிய உள்ளத்தில் தோன்றும் அருமந்த உணர்ச்சியாகிய இன்பமேயாகும்.

இவ்வின்பத்தையே இன்றமிழ்ப் புலவர்கள் அன்பினைந்திணை என்று பலவாறு சிறப்பித்துக் கூறுவர். இவ்வின்பத்தைப் புகழவே, விரித்துரைக்கவே, பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும் பிறவும் எழுந்தனவென்றால் இதன்பெருமையை இற்றென எடுத்தியம்பல் இயலாததொன்றும். காதலான் எழும் கழி பேரின்பத்தை எத்துணை யுயர்வாக வைத்து எண்ணினரென்றால், நீண்ட நாள் நெடிதுழன்று நிமலனடி நீழ லெய்திய நீத்தாரின் இன்பத்துக்கு நிகராகக் கண்டனர் காதலின் உயிர்நிலை கண்ட கவியுடைப் புலவர். இவ்வுண்மையை, இறைவனடி நீழலின்பத்தை யடைந்து தெவிட்டிய இராமலிங்க அடிகள் மிகவும் அழகிய இன்கவி யொன்றான் அருளுவது அனைவரும் படித்து ஆனந்திக்கத்தக்க தொன்று.

இளவேனிற் காலத்தே, மாலைப் போழ்தில் குளிர்ந்த நீழலளிக்கும் கொழும் பொழிலில், பொற்றாமரை மலர்ந்து திகழும் பொய்கையினருகில், முல்லைக் கொடிகளும் மல்லிகைக் கொடிகளும் பின்னிப்படர்ந்த பந்தரின்கீழ், அமைக்கப்பெற்ற சந்திரகாந்தக் கல்லாலாய அதிசய மேடையின்கண் அமிர்த கதிரோன் அளிசெய்யவும், வீணையும் பாடலுங் கலந்த தீந்தமிழிசை செவிக்குணவூட்டவும் களவினாற் கலந்த கற்புடைக் காதலியின் கனி மொழியும் உடனாகை அனுபவிக்கும் இன்பத்தை நிகர்த்தது இறைவனடி நீழலால் எய்

தும் இன்பமும் எனக் கூறும் செய்யுளைப் படித்துணர்மின் அன்பர்களே,

"இளவேனில் மாலையாய்க் குளிர்சோலை யாய்
இலஞ்சியும் பொய்கை யருகாய் [மலர்
ஏற்ற சந்திர காந்தமேடை யாய்அதன்மேல்
இலங்கு மாமிய வணையுமாய்
தளவேயு மல்லிகைப் பந்தாயப் பால்போற்
றழைத்திடு நிலாக் காலமாய்
தனியிளந் தென்றலாய் நிறைநாம் புளவீணை
தன்னிசைப் பாட லிடமாய்
களவே கலந்த கற்புடைய மடவரல்புடை
கலந்த நயவார்த்தை யுடனாய்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம் தின்ன
கழனிழற்சுக நிகருமே" [டிக்
—இராமலிங்க அடிகள்.

சுருங்கக் கூறின், காதலே, காசினியைத் தன் வயப்படுத்திக்கொண் டிருக்கின்ற தென்னலாம். காதலின்றேல் உலகம் சுவின்பெற்றிலங்கா. இத்தகைச் சிறந்த காதலான் வரூஉவம் இன்பத்தை யுண்டவர்கள் எங்ஙனம் பிரியத் துணிவர். அன்றில்போல் வாழ்கின்ற அருமந்த காதலர் அவ்வன்றில் ஒன்றை யொன்று பிரிந்தவுடன் இறந்து படல் போல்,ஒருவரையொருவர் பிரிந்தவுடன் இறப்பதைக் கூறவும் வேண்டுமோ!

இக்காதலுணர்வு காதலன் காதலிகளிடத்தில் மட்டும் தோன்றுமென்பதில்லை; குழந்தையைப் பெற்ற தாயினிடமும் தோன்றுகின்றது. மகனுக்குக் 'காதலன்' என்னும் நூல் வழக்கும் உய்த்துணரத் தக்கது. ஆயினும் முன்னது பெருவழக்கும் பின்னது அருகிய வழக்குமுடையதா யிருக்கின்றன. எப்படியேனும் 'காதல்' என்ற ஒன்று நீங்கியவழிச்'சாதல்'எங்கு உண்டெனத் தெளிவதே இக்கட்டுரையின் இனிய நோக்கமாகும். எனவே காதலுக்கும் சாதலுக்கும் தொடர்புண்டென்பது அறியலாம். என்னை? அருங் குழவியைப் பிரிந்த அன்னையிடத்தும், காதலனைப் பிரிந்த காதலியிடத்தும் சாதல் உண்டு எனத் தெளியப்போவதான் என்க.

தாய் பிரிந்த தலைப்பெய் நிலை

பண்டைத் தண்டமிழ் நாட்டில் தனதருமந்த தவப்புதல்வன் உயிர் துறந்தவுடன் ஆற்றாமை மீதூர்தலும் அன்னை ஆவி துறத்தல் பெருவழக்காயிருந்தது போலும். பண்டைத் தமிழர்களின் பழக்க வழக்கங்களை வரையறுத்துரைக்கும் ஒல்காப் புலமைத் தொல்காப்பியத் தின்கண், காஞ்சித் திணையின்துறையாகக் கூறிய "மாய்பெருஞ் சிறப்பிற் சிறுவர் பெயாத் தாய் தப வரூஉம் தலைபெயர் நிலைமை" என்னும் சூத்திரத்தான் விளக்குகின்றார். இச்சூத்திரத்திற்கு உரை வகுத்த உச்சிமேற் புலவர் கொள்நச்சினார்க் கினியர், "தன் மகன் சிறப்பு மாய்தற்குக் காரணமாகிய பெருஞ் சிறப்போடு களப்பட்டுத் துறக்கத்துப் போயவழி அவனோடு இறந்து படவரூஉம் தாயது தலைப் பெயல் நிலைமை" என்று விரித்துரைத்தமையும் இவ்வுண்மையை நன்கு விளக்கும்.

எனவே, பொருளகத்தே பொங்கு நணிப் பகழிகள் தைத்த புண்பட்ட மேனியொடு புதல்வன், பொன்னுலகம் புக்கவுடன், போற்றி வளர்த்த அவன் அன்னை ஆவி துறத்தலைக் காண்கின்றோம்.

போர்ப் பறையின்னொலி செவியுட் புகுகின்றது. புதல்வன் கரத்தில் புனித வாளை யீந்து போர்க்களத்துக் கனுப்புகின்றாள் புரையிலா வீரத் தாய்.

படுகளத்திற் றனது புதல்வன் அம்புப் பாயலில் ஆவி துறந்து கிடக்கக் காண்கின்றாள் அவன்கண் அன்பு நிறைந்த அன்னை. வயிறலைத்துக்கொண்டு மாழ்கி யழுகின்றனளா! இல்லை. ஆனந்த மேலீட்டானும், அருமந்த புதல்வனைப் பிரிந்த ஆற்றாமையானும் ஆவி துறக்கின்றாள். நெடுங்கோளன் என்னும் வீரத்தமிழன் நிணம்நிறைந்த களத்தே மரித்தமை கண்ட வீரத்தாய் பிரிவாற்றாமையான் ஆவி துறத்தலை, தகடூர்யாத்திரை என்னும் நூல் அழகாக எடுத்துரைக்கின்றது.

"எற்கண்ட றிகோ எற்கண்ட றிகோ
என்மகனுதல் எற்கண்ட றிகோ
கண்ணேகண சூழ்கினவே
வண்ண் மாலையும் வாளிவிடக் குறைந்தன

வாயே, பொங்குநுனைப்பகழி மூழ்கலிற்
புலாவழித்து
ஆவகாழிகை அம்புசெறித் தற்றே
நெஞ்சே, வெஞ்சரம் கடந்தன, குறங்கே
நிறங்கார்ந்து பலசரம் நிறைத்தன, அதனால்
அவிழ்பூ அப்பனைக் கிடந்தோன்
கமழ்பூங் கழற்றீங்காய் போன்றனனே.

—(தூதகடூர்யாத்திரை)

முற்காலத்திய தமிழ்நூல்களில்மேற்கோள் தேடிச் செல்வானேன்? நாடோறும் நாம் கண்டும் கேட்டும் வருகின்ற உலகியலே இவ்வுண்மையை உணர்த்துமன்றோ?

அன்பு நிறைந்த தாய், தன தருமைக் குழந்தையோடு அகமகிழ்வுடன் கொஞ்சிக் குலாவி ஆடிப் பாடிக் களித்துக் கொண்டிருக்கின்றாள். காதல் நிறைந்த கணவன் அழைக்கும் ஒலி காதிற் படுகின்றது.

மழலைமிழற்றுங் குழவியை மறு விநாடியில், மெத்தென்றிருக்கும் மெத்தையிற் கிடத்திச் செல்கின்றாள். சிறுபொழுது தனது செல்வக் கொழுநனுடன் சிரித்துப் பேசிவிட்டு மனையுள் நுழைகின்றாள். புகுந்தவுடன் என்ன காண்கின்றாள்? வீடு நெருப்புப்பற்றிக் கொண்டதைக் காண்கிறாள். உள் நுழைந்தால் தான் இறந்துபடுவளென்பதையுணர்ந்தவளே. ஆயினும் பெற்ற மனம் பித்து. இடையில் சேலையை இறுக்கிக் கட்டிக் கொண்டாள். புதல்வனிடங் கொண்ட புனிதக் காதலால் தனதுயிர்க்குத் துணிந்து உள் நுழைந்து குழந்தையை எடுத்து மார்போடணைத்து வெளியிற் கிடத்திவிட்டாள். தழலின் வெம்மை தாங்காது உயிர் துறக்கின்றாள். என்னே! அன்னையின் இணையிலா அன்பு!

எனவே, காதல் நிறைந்த தாய் அக்காதல் நிறைந்த குழவியைப் பிரிந்த வழி ஆற்றாது ஆவிதுறப்பள் என்பதை நூல் வழக்கானும் உலக வழக்கானும் கண்டாம். இனிக் காதலனைப் பிரிந்த காதலியின் நிலையையும் சிறிது காண்பாம்.

சாவிற் சாதல்

காதற்கள்ளுண்டு களித்த காதலி தனது காதலனைப் பிரிந்த வழி உயிர் துறந்து விடுவள். என்னை? அவனும் அவளும் ஒருயிரும் ஈருடலுமாயிருத்தலின் என்க. ஒருயிர் சென்றபோழ்து ஒன்றாய காதலியின் உயிரும் சென்று விடுமென்பது இங்குக் கூறாமலே விளங்கும். ஆயினும் ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுக்களை எடுத்துக் காட்டி இவ்வுண்மை கண்டு இக் கட்டுரையை முடிப்பாம்.

கோவலன் கொலையுண்டான். தான் செய்தமை தவறென வுணர்ந்த தானை வேந்தனும் நெடுஞ்செழியன், "யானோ அரசன், யானேகள்வன்" எனத் தரையில் வீழ்ந்து தனதாவி துறந்தான். அவ்வரலாறு கேட்ட அவன தருங் காதலியாம் பெருங்கோப் பெண்டும் அக்கணமே ஆவி துறந்தாள். இச்சீரிய வரலாற்றைச் சிலப்பதிகாரமென்னும் திருவுடை நூலில் இளங்கோ அடிகள் என்னும் அருந்தமிழ்ப் புலவர் மிக அழகாக எடுத்துரைக்கும் பகுதி அனைவரும் அறிந்து மகிழத்தக்கதாகும்.

"அரிமானேந்திய அமளிமிசையிருந்த
திருவீழ்மார்பிற் றென்னர் கோமான்
தயங்கிணர்க் கோதை தன் துயர் பொறான்
மயங்கினன்கொல் லெனமலரடிவருடித்
தலைத்தாள் நெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறாள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர்கொண்டவன்உயிர்தேடினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்
[தனள்"

இச்சீரிய நிகழ்வையே இன்கவிப் புலவோர் தலையளிக் குதாரணமாகத் தருவர். இதை ஐயனார் இதனால் தாம் யாத்த புறப்பொருள் வெண்பா மாலையில், மூதானந்தம் எனச் சிறப்பிப்பர்.

இப்படியில் வைத்து எண்ணத்தக்கவள் சூரன்மனைவி பதும கோமளையென்பவள்.

குக்குடக் கொடியோனின் கூரிய வேலாற் கொலையுண்ட கொழுநன் சூரபன்மா உயிர்துறந்தான் என்னும்சொல்

உட்புகாமுன் தானும் உயிர் துறந்தாள் அன்பு நிறைந்த அருமந்த காதலியாம் பதும கோமளை. இவ்வுண்மையைக் கச்சி நகர்ப் பெரும் புலவராய கச்சியப்பர் அகங்குழைந்து பாடும் அழகிய தமிழ்க்கவியை நோக்குமின்.

"காவன் மன்னவன் இறந்தன
 னுமுரை கன்னத்துள்
மேவு மெல்லையில் அசனியே
 றுண்ட வெண் பணிபோல்
தேவியாகிய பதுமகோ
 மளையெனுந் திருமங்கை
ஆவி நீங்கினள் தலையளி
 யென்ப தருவன்றே"

எனவே, இத்துணையுங் கூறியதால், காதலே உயிர்என்பதும், உயிரே காதல் என்பதும், காதல் நீங்கிய கணத்தில் கவினுடையாருயிரும் கழன்றுவிடுமென் பதும், இக்குறி காணப்படா விடத்திற் காதல் உண்டென்பது பொய்ம்மை யென்பதும் விளங்கும்.

காதலின் உயர் நிலையையும், உயிர் நிலையையும் இற்றெனக் கண்டனர் பழந் தமிழ்ப் பெரியார்கள்.

களவொழுக்கத்திலும், காதலன் தனதாருயிர்க் காதலியை அடையப் பெறுதவழி மடலேறும் வழக்கம் பண்டைக்காலத்தில் உண்டு என்பதைக் கேட்கின்றோம். இதுவும் ஒருவகை உயிர் துறக்கும் நிலையேயாகும்.

தண்டமிழ் நாடு, பண்டைத் தமிழ் நாட்டைப்போல், ஒருத்தி ஒருவனையும், ஒருவன் ஒருத்தியையும் காதலித்து வாழும் உயிர் நிலையை - உயர் நிலையை- அடைக; ஒவ்வோரில்லும் ஒத்த அன்புடைக் காதலர் விளங்கும் ஒளிமணை யாகத் திகழ்க.

"அன்பின்வழிய துயிர்நிலை யஃதிலார்க்கு
 என்புதோல் போர்த்த வுடம்பு. —குறள்

காதல் காதல் காதல்—காதலின்றேல்
சாதல் சாதல் சாதல்" —பாரதி

சுந்தர சுலோசனு

[திரு. தி. ர. சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

இதழ் 11.

தோன்றாத் துணைவன்

"அப்பா! இன்று வருகிறேன் என்று கூறிச் சென்ற ஜயகுமாரர் இன்று வாராத தன் காரணம் தெரியவில்லையே"

"கண்மணி சுலோசனு! நம்முடைய விஷயத்தைப்பற்றி அவர் எங்கு ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறாரோ நாம் அறியோம். காலமாகிவிட்டது; இனி அவர் இவ்விருளில் இங்கு வருவாரென யானெண்ணவில்லை"

"அப்பா! ஒருகால் அவர் வந்தாலும் வரலாம்."

"அம்மா சாரத! ஜயகுமாரனுடைய காரியங்களைப்பற்றி யாமொன்றுந் திட்டமாகக் கூறியியலாது. உலகம் புகழும் அவருடைய துப்பறித்திறனின் மாண்பை இன்றே யானுணர்ந்தேன். கண்மணி சுலோசனு! மோகனசுந்தரங் குற்றமற்றவனென ஜயகுமாரர் கூறிச்சென்றது எனக்குப் பெரும் வியப்பையே யளிக்கின்றது. சில நிமிடங்களுள் உண்மைக் குற்றவாளி யாரெனத் தெளிந்து மோகனசுந்தரத்தின் மீதிருந்த வீண் பழியை அவர் விளக்கியது எனக்குப் பெரும் ஆச்சரியத்தையே யளித்திடுகின்றது. ஜயகுமாரர் கூறியது உண்மையாயிருக்குமேல் யான் மோகனசுந்தரத்தின் மீது வீண் சந்தேகமே கொண்டவனுவேன்."

"அப்பா! அவர்மீது-குற்றமறியா அவர்மீது கள வாடிய குற்றத்தை நீர்

சாற்றினீரென இன்று மாலையேயுணர்ந்தேன்."

"கண்மணி! மோகனசுந்தரம் திடீரென மறைந்ததே அவனைச் சந்தேகியுமாறு என்னைத் தூண்டியது. இருப்புப்பெட்டியிலிருந்து சுமார் இருபதினாயிரம் ரூபாய் பெறுமானம் ரூபாய்களும் நகைகளும், நான் உங்களுக்கு நேற்றுக் காட்டிய வைரமாலையும் வெள்ளியுறையும் பிடியுமிட்டவாளும் மறைந்ததேயல்லான் அவைகள் மறைந்தவன்றே மோகனசுந்தரமும் மறைந்ததே அவன் மேற்கூறிய பொருள்களுடன் மறைந்தானென என்னையெண்ணுமாறு தூண்டியது."

"அப்பா! அவரைக் கேவலங் கள்வனாகவா மதித்தீர்? ஆ! சா!......."

"கண்மணி! அவனும் நகைகளும் ரூபாய்களும் ஒருங்கே ஒரே நாளில் மறைந்ததேயென்னை அவன்மீது சந்தேகங் கொள்ளுமாறு செய்தது."

"அப்பா! இதுகாறும் நீர் அவருடன் பழகியும், அவரை இளமையிலிருந்து வளர்த்தும், தாய்தந்தையற்ற அவருக்கு எடுப்பில் அன்னையாகவும் அப்பனாகவுமிருந்து வளர்த்த நீர், அவர் அத்தகைய காரியஞ் செய்வாரென்று எண்ணியது நியாயமா?"

"சுலோசனா! அவன் மீது வீண் பழிகளைச் சுமத்தவேண்டுமென்பது என்னுடைய கருத்தல்ல. சந்தர்ப்பம் அவ்வாறிருந்தது. மோகனசுந்தரம் அவ்வாறு திடீரென மறைந்ததன் காரணம் இதுவரையிலும் புலனாகவில்லை. அந்நிலையில் யான் அவனைச் சந்தேகியாது மற்றென் செய்வேன்? அவன் மீது யான் சந்தேகங் கொள்ளும்போது என் மனம் பட்டபாடை பரமனே யறிவான். கண்மணி! அவனை அவனுடைய அன்னையின் பொருட்டு என்னுடைய அருஞ்சுதன் போலும் வளர்த்தபாசம் என்னை விட்டகலுமோ? எக்காலும் அகலாது. அவ்வளவு அருமையாக யான் வளர்த்த அவன் கள்ளனாயினன் என்றெண்ணியதுங் கண்மணி! யான் கண்ணீர் விட்டேன். என்னுடைய துயர் இத்தகையதென ஜயகுமாரர் அறிவார். ஒருவனுடைய வாழ்க்கையில் இன்பமுந் துன்பமும் மாறிமாறி வரும் என்பதுஉலகவழக்கு. ஆனால், கண்மணி! என்னுடைய வாழ்க்கை ஆதியிலிருந்து ஓர் இடிப்புண்ட வாழ்க்கையே யாகுமென நீயறிவாய். என்னுடைய துயரங்களையெண்ணியெண்ணி யான் என் உடல் நலத்தை இழத்தலையும் நீ கவனிக்கவில்லையா? என்னுடைய தலைப் புதல்வனாகிய சண்முகசுந்தரத்தின் விஷயம் என்னை இரவும் பகலும் வாட்டி வருதலை நீயறிவாய். அவனுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க யான் செய்த முயற்சிகளெல்லாம் அவலமாயின."

"அப்பா! அண்ணனைப் பற்றியும் வேதா ஜயகுமாரர் தன்னிடங் கூறியதாக சாரதா கூறினாள்."

"ஆ! சண்முகசுந்தரத்தைப்பற்றியா? காணமற்போன என் கண்மணியை யான் மீண்டுங் காண்பனா? இளமையிலிருந்தே இறைவன் மாட்டு இயம்புதற்கரிய அன்புடைய என் சண்முகம்- என் காந்தாவின் சண்முகம் - தூர்த்தரின் சகவாசத்தின் தீய ஒழுக்கம் பூண்டானாயினும் அவனை யான் மீண்டும் பெறுவனா? அம்மா சாரதா! ஜயகுமாரர் சண்முகத்தைப்பற்றி உன்னிடம் என்ன இயம்பினார். சீக்கிரம் கூறு."

"அப்பா! அவர் என்னிடம் விளக்கமாக ஒன்றும் அறையவில்லை. ஆனால் அவர்மீது வீண் குற்றங்களும் பழிகளும் ஒரு விரோதியால் சுமத்தப்பட்டிருக்கின்றன எனவும்; அதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கின்றதென்றும்; அப்பாவியின் கரத்தினின்றும் இறைவனருளால் வெகு சீக்கிரத்தில் அவரை மீட்டிடுவதாகவும் கூறினார்."

"ஆ! என் சண்முக! வீண் பழிகளைச் சுமந்தா நீ வறுமைப் பிணியால் வாடித் திரிகின்றாய். எப்படுபாவியின் சூழ்ச்சிக்கு நீ இரையாயினையோ? பாவியேன் அதனை உண்மையெனக் கொண்டல்லவோ நீ ஒழுக்கங் கெட்டனையென உன்னைக் கடிந்தேன். கண்மணி! நீ மாத்திரம் உண்மையை அவ்

வமயம் எனக்குரைத்திருப்பின், நான் உன்னைப் பிரிந்து வாட நேர்ந்திடாதே. வறுமையும் உன்னை வதைக்குமா? ஆ தெய்வமே! என் கண்மணி சண்முகம் வீண் பழித் தாங்கியா நீ வாடுகின்றாய். உன்னுடைய தற்கால இடிப்புண்ட வாழ்க்கைக்கு யானன்றோ காரணம். யான் சிறிது யோசித்திருப்பின், இன்றேல் தீர ஆராய்ந்திருப்பின் நீயும் யானும், கண்மணி சுலோசனையுஞ் சாரதாவும் இவ்வாறு வாட நேர்ந்திராதே!"

"அப்பா! வீணாக வாடிப் பயனென்? ஊழ்வினை யாரை விட்டது? எல்லாம் வினையின் பயனே யாகும். துன்பத்தை நுகர நம் விதியிருப்பின் நாம் துயரை யடைதல் முரணுமோ? அதற்கு நீர் வருந்துதல் முறையோ? எனினும் இறைவன் நம்மைக் கைவிடான்."

"ஆம் அப்பா! சாரதா கூறுவது உண்மையே. நாம் வீணாக வருந்திப் பயனென்? இறைவன் நம்மை எக்காலத்திலும் கைவிடான். அண்ணா! ஒரு புல்லொழுக்கினனின் தீய சூழ்ச்சியான் வீண் பழிகளைத் தாங்கினார் என ஜயகுமாரர் கூறியது உண்மையெனின், நேற்றுத் திடீரென மறைந்ததற்கும் அப்பாவியே காரணமாக இருத்தலாகும்."

"அப்பா சுலோசனை இயம்புவது போலும் சிறிய அண்ணா மறைந்ததும் ஒரு தீய சூழ்ச்சியினாலேயே இருத்தல் வேண்டும். பொருளைக் களவாடியவன் அண்ணாவின்மீது திருட்டுப் பட்டம் வரவேண்டும் எனக் கருதியே அவ்வாறு செய்திருக்கலாம். சகோதரர்கள் இருவரும் தீய வீண் பழிகளைத் தாங்கி இடிப்புண்டு வாழ அவர்கள் விதியிருந்தது போலும்."

"சாரதா! சண்முகம் மாத்திரம் உயிருடன் இருப்பானாயின் அவனை எவ்வகையானுங் கண்டுபிடிப்பேன். அவன் சென்ற ஓராண்டாகப் படும் இன்னல்களுக்கு யானன்றோ முக்கிய காரணம்? ஆ! மோகன சுந்தரா! உன்னை அப்பாவி சண்டாளன் என்ன தீங்குசெய்ய எண்ணியுள்ளானோ? ஒருகால் சண்முகமும் அவனுடைய கரத்தில் சிக்கி என்ன துன்பம் நுகருகின்றானோ! சென்ற சிலவாண்டுகளாக யானெய்திய இன்பம் ஆகாயத்தில் தோன்றும் மின்னொளியைப்போலும் மறைந்ததே. ஆ! ஈசா! துன்பத்தையே இவ்வுலகத்திடை நுகர என்னைப் பிறப்பித்தனையோ! ஆ! சுலோசனா! சாரதா! என்னைப்போலும் ஒருவன் இளமையிலிருந்து துன்பம் நுகர்ந்து இருத்தலினும் இறத்தலே நன்று. ஆ!........"

"அப்பா! வருந்தாதீர்கள். எல்லாம் இறைவனுடைய செயல். நம்முடைய ஊழ்வினையின் பந்தங்கள். ஜயகுமாரரிடம் வார்த்தையாடியதிலிருந்து ஒரு புத்துணர்வு என்னகத்தி லரும்பியிருக்கின்றது. என்னை இதுவரை வாட்டிநின்ற சோகம் இன்று என்னகத்தை நீத்து மறைந்திருப்பது எனக்குப் பெரும் ஆச்சரியத்தையே யளிக்கின்றது. எனக்குள் ஒரு தெய்வீக சக்தி, யான் மீண்டும் சில தினங்களுள் அவரைப் பெறுவேன் என்றெண்ணுமாறு என்னைத் தூண்டுகின்றது. இறைவனருளால் இதுகாலை நம்முடைய "உரிமையுறையுளை" மறைத்து நிற்கும் துயரமென்னும் மேகம் மறைந்தொழியுமென்றே எனக்குத் தோன்றுகின்றது. ஓராண்டுக்கு முன்னர் நாம் ஒருங்கே நுகர்ந்த இன்பத்தை மீண்டும் நாம் சில தினங்களுள் நுகர்ந்திடுவோம் என்றெண்ணுமாறு என்னைத் தூண்டுகின்றது."

"அப்பா! சுலோசனா கூறியது உண்மையென்றே எனக்குப் புலனாகின்றது. நேற்று யான் ஜயகுமாரருடன் பேசியதிலிருந்து ஓராண்டாக என்னை இரவும் பகலும் ஓயாது வாட்டிநின்ற வாட்டம் வாடியிருக்கின்றது. ஓராண்டுக்குமுன் மறைந்த அவரை மீண்டும் பெறுவோமென்றே எனக்குத் தோன்றுகின்றது. எனவே, நீர் வீணாகக் கலங்க வேண்டாம். நம்முடைய துயரைப் போக்கி இன்பம் நல்க வல்லார் ஜயகுமாரரே யாவர். அவர் வந்தவுடன் சில உண்மைகளை நாம் கண்டறிவது

திண்ணம். இன்று வருகின்றேன் என்று கூறியவர், இன்று வாராமையே, நம்முடைய விஷயத்தில் ஈடுபட்டு அவர் சில உண்மைகளைக் கண்டிருக்கிறார் என்பதை விளக்கவில்லையா?"

"ஆ! ஈசா!........."

"இதுகாறும் உம்மை அண்டியிருந்த உம்முடைய கண்கள் கலங்குகின்றனவே. ஓயாத் துயரம் உம்மை இந்நிலைக்கு மாற்றிவிட்டதா. நீர் இவ்வாறு கலங்கினால் பேதைகளாகிய நானும் சாரதாவும் என் செய்வோம்"

"கண்மணி சுலோசனா துயரம் என்னால் தாள வியலவில்லையே..........."

"அப்பா! இறைவன் தன்னை நம்பினவரைக் கைவிட்டறியான். பாரத்தை அவன்மீது சுமத்தித் தைரியமாக இரும்."

"கண்மணிகளே! நீங்கள் எனக்குத் தைரியம் இயம்புகின்ற நிலைமையையே ஆண்டவன் எனக்கருளியுள்ளான். என் கவலை ஓயும் நாளுமுண்டோ. ஆ! சண்முகா! மோகனசுந்தரா உங்களை மீண்டும் யானென்று காண்பேன்."

"அப்பா! சாரதாவின் மாற்றலைக் கவனியும்; கவலையற்ற என் நிலையை உய்த்துணரும். எங்களுடைய கவலைகள் எங்குற்றன. ஜயகுமாரர் எங்களுக்கு அளித்த வாக்கு எங்களுடைய வாட்டத்தை யோட்டியது. அவர் எங்களுடைய உள்ளத்தைக்கொள்ளைகொண்டவரைத் தேடிச் சில தினங்களுள் இறைவனருளால் அளிப்பதாகக் கூறிய வாக்கு எங்களுக்குத் தைரியத்தை யூட்டியிருக்கின்றது. நீரும் ஜயகுமாரரையே நம்பும். அடக்கமும் அறிவும் இறைவன்மாட்டுப் பேரன்பும் உடைய அவர் நம்முடைய துயரைக் களைவது திண்ணம்."

"என்னருங் கண்மணிகளே! அகாலமாகின்றது. நீங்கள் உங்களுடைய அறைக்குச் சென்று உறங்குங்கள். இறைவனே நமக்குத் தோன்றாத் துணைவன். நம்மால் என்னசெய்ய ஒல்லும்."

"அப்பா! நீங்கள் முதலில் உங்களுடைய அறைக்குச் சென்று துயரை மறந்து துயில் கொள்ளுங்கள். பின்னர் யானும் - சாரதாவுஞ் செல்கின்றோம். உங்களை இந் நிலையில் விட்டு யாங்கள் எவ்வாறு எங்கள் அறைக்குச் செல்ல ஒல்லும்."

"சரி வாருங்கள் செல்வோம்."

திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும்

[திரு. பொன்னம்மாள், பி. ஏ., எல். டி.]

VI

கிறிஸ்துவின் பாடுகளை முன் குறித்து அவைகளால் முழுமுதற் பொருளான இறைவனின் அன்பை உலகிற்கு வெளிக்கூறின ஒரு பக்தன் கூறுவதைக் கேட்கும்போது, ஆ! எத்தனையான அன்பும், தைரியமும், நம்பிக்கையும் நம் உன்னத பிதாவைப் பற்றிப் பொங்கி வழிகின்றன! அப்பக்தன் கூறுவது:--

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்....நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர்காயப்பட்டு, நம்முடைய அக்கிரமத்தினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளில் நாம் குணமாகிறோம்" —எசா 53 : 4 - 6. என்பதே. இவைகளையும், இன்னும் "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் என் காருண்யத்தால் நான் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்" —எரேமி 31 : 3. "மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும்,

என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலை பெயராமலும் இருக்குமென்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்"—ஏசாயா 54 : 10; என்பது போன்றதுமான எண்ணற்கரிய சத்திய வாக்குகளை நமக்கு ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும் அளித்திருக்கிற அன்பின் சாகரமாகி ஆண்டவனின் அன்பை ருசிக்க அவரது மக்களாகிய மானிடர் தங்களைப் பலவாறாகத் துன்புறுத்தி அங்கவீனம் செய்துகொள்ளத் தேவையில்லையென அடிக்கடி அறிவு குறைந்தோருக்கு அறிஞர் அறிவு கொளுத்தி அருட்சோதியண்டை அவரை நடத்த இடையறாது முயற்சிக்க வேண்டுமன்றோ? "பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றாரே பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல் கிரமம்"—II கொரிந்தியர் 12 : 14 என்றும், பெற்றாருக்காகப் பிள்ளைகளல்ல பிள்ளைகளுக்காகப் பெற்றாரே தம்மையொடுக்கி, யுழந்து, கஸ்தியடைதல் உலகானுபவமும் இயற்கையின் சிறப்புமென்பதை நாம் அறிந்து எல்லாருக்கும் எல்லாமான இறைவனது அன்பும் கருணையும் அத்தகையனவேயென உணருவது எக்காலம்? அத்தகைய நம் அம்மையப்பரின் அன்பைக் கண்ணுக்கு மெய்யாய் ருசித்துக் கண்டாலொழிய "அன்பில் தொழு" என்ற நம் பெரியாரின் திருவாக்கைக் கைக்கொள்ளல் எவ்வளவும் கூடாதென்றறிக. நிற்க.

பனிரண்டாவதாக :— இறைவனையடையும் ஏதுக்களாவும், பலதிறப்பட்ட படிகளாகவும் பயன்படுமாறு பெரியோரால் நியமிக்கப்பட்ட ஆலயப்பணி, ஆலய வழிபாட்டுமுறை ஆகியவற்றைத் தேசப்பணி, பாஷைப்பணி முதலிய பலதிறப்பட்ட பணிகளினின்றும் வேறுபடுத்தல் நலம். என்னை? அண்ட சராசரங்களும் ஆண்டவனுடைய பொது மனை. அதன்கண் நிலவுகின்ற உயிருள்ளனவும், உயிரில்லனவுமான எண்ணிறந்த வஸ்துக்களையும், மிருக ஜீவன்களையும், மனுக்குலமனைத்தையும் ஏக சக்கிராதிபதியாயிருந்த, இறைவனே ஆளுகின்றான். எத்தகைய ஜாதியாருக்கும், தேசத்தாருக்கும், பாஷைக்காரருக்கும் அவர் பொதுவான பிதாவன்றோ? அவருடைய திருராஜ்யமாகிய நீதி, அன்பு, சத்தியம், பரிசுத்தம் முதலியவற்றாலாய தேவரசு, பூவுலகின்கண் நிருமிக்கப்படும்படியாகப் பூமியின் எப்பக்கத்திலும் அவரது பக்தரான அடியார் புரியும் திருப்பணியும் பொதுவானதாயிருக்க வேண்டாவோ? பாஷைப்பணியோ எல்லாருக்கும் ஓரே சம்மதத்தை யளிக்கும் பொதுப்பணியன்று. அந்தந்தத் தேசத்தாரது பாஷை அந்த்தித் தேயத்திலே மாத்திரந்தான் சிறப்பிக்கப்படும். ஆல்பிரட் ஷேக்ஸ்பியர், மில்டன் முதலியோர் ஆங்கில தேயத்திலும், காத்தி மார்டின் லூத்தர் முதலியோர் ஜர்மனியிலும், நெப்போலியன், ராசின் மாலியர் முதலியோர் பிரான்சிலும், டான்றி இத்தாலியாவிலும், கஸ்டாவஸ் ஸ்காந்தி நேவியாவிலும், ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவிலும் சிறந்த உரிமைப் புகழைப் பெற்றார்கள். இவர்கள் பாஷையையோ, நூல்களையோ, பிறதேசத்தாரும் பிற பாஷைக்காரரும் ஒருவாறு புகழ்ந்து அதிசயிப்பினும், இவர்களைத் தம்முடையோராகப் பாவித்து உரிமை பாராட்டார் ஏனைய தேயத்தார். இறைவனோ வென்றால் அவ்வாறு ஏதோ ஒரு தேசத்தாராலோ, பாஷைக்காரராலோ அன்றி உலகின் எம்மக்களாலும் கொண்டாடப்படுபவன். தமிழரோ அன்றிப் பிறவொரு பாஷைக்குரியாரோ இறைவன் தம்முடையனெனவும், பிற பாஷைக்கும் தேசத்திற்கும் உரியரல்லன் எனவும் கூறுதல் அறிவீனமாகும். இறைவன் உலகெங்கணும் சிதறப்பட்டிருக்கும் தம் மக்கள் பலரிடமும் அவரவருக்குரிய பாஷையில் பேசி, அவரவருடைய மனநிலைக்கும், ஆன்மநிலைக்கும் தக்கவாறு தம்மை வெளிப்படுத்தி வருகிறான். கிறிஸ்து

வின் மதம் உலகில் இத்தனை யதிசயமாய்ப் பரவிக் கிரியை செய்வதை நாம் கண்ணுக்கு மெய்யாய்ப் பார்க்கிறோமே! காரணம் என்ன? அவர் இறைவனை உலகோர் யாவரும் யாதொரு ஆட்சேபனையும் ஐயமும் இன்றி அறிந்து அனுபவத்தில் காணுமாறு முழுமுதற்பொருளாகிய கடவுளை வெளிப்படுத்தினார். அவர் உபதேசங்களும், கொள்கைகளும் ஒரு தேசத்திற்கோ, ஜாதிக்கோ மட்டுமின்றி யாவருக்கும் எக்காலத்திலும் பொருத்தமாயிருப்பன. அவர் உலகிலுள்ள எல்லா முக்கிய பாஷைகளாலும் விளக்கப்பட்டு வெளிப்படுகிறார். அவரவருடைய பாஷையில் அவரவரோடு பேசி, உறவு கொண்டாடுகிறார். அவரை முதன் முதலாக நம் நாட்டுக்கோ அன்றிப் பிறநாட்டுக்கோ கொண்டுவந்த பெரியார் யாதாமொரு பாஷையோடு அவரைச் சம்பந்தப்படுத்தியிருப்பாராயின், கிறிஸ்து இருந்த விடத்திலேயே இருந்துலாவி, அவிந்து, அழிந்துபோயிருப்பர். இப்போதோ அவர் ஏறக்குறைய 400 பாஷைகளில், உலகின் நாற்றிசையிலும் தோத்திரிக்கப்படுகிறார். ஆகவே, நாம் கடவுட் பணியையும், கடவுட் சிறப்பையும் பெருக்கி மேன்மைப்படுத்த விருப்பங்கொள்ளின், தெய்வீக அறிவுவளர்ச்சிக்கென்றும், மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கெனவும் பெரியார் எடுத்துக்கொள்ளும் மதசீர்சிருத்தம், ஆலயச் சீர்திருத்தம் ஆதியவற்றோடு தேசவுரிமை, ஜாதியுரிமை, பாஷையுரிமை, சுதந்தரவுரிமை முதலிய பிறவுரிமைகளைப் புகுத்தல் கூடாதென்க.

நமக்கான அறிவு வளர்ச்சியையும் ஆன்ம வளர்ச்சியையும், இறைவன் பணியையும் உலகில் எந்த எது, அல்லது எத்தகைய மனிதர் தடைசெய்யக் கூடும்? கடவுட் பக்தியையும் பணியையும் அரசாங்கமாயினும் ஏனை அங்கமாயினும் தடுத்தற்கரிது என்பதை அப்பரும்,

'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்'

என்னும் தம் வாக்கில் தெளிவாய் வலியுறுத்தி யிருக்கின்றாரன்றோ? அன்றியும் உலக சரித்திரத்திலும் உலகானுபவத்திலும் நாம் காண்பதியாது? உலகில் சிறந்த மதஸ்தாபனம் செய்தோர், பல நவீன சாஸ்திரத்தைக் கண்டு உலகிற்கு வெளிப்படுத்தினோர், இன்னும் தேசீய நலத்தின் பொருட்டுத் தம் உடல், பொருள், ஆவி யாவையும் தத்தம்பண்ணி யுழைப்போர் முதலியோரின் ஜீவிய சரித்திரங்களை நோக்குகையில் அன்னோரிற் பலர் துன்பத்தின் மத்தியிலும், அடிமைத்தனத்தின் அல்லலின் நடுவிலும், பகை, விரோதம், ஜீவவதையின் மத்தியிலும் இருந்துகொண்டே தம் அறிவைப் பழக்கி, அரிய விஷயங்களைக் கண்டு உலகோர் உய்யும்படி சேமித்து வைத்துப் போயினர் எனத் தெரிகிறது. இப்போது உலகின் ஒரு முனை துவக்கி மறு முனைவரைக்கும், சூரியன் உதிக்கும் திசைமுதல் அது அஸ்தமிக்கும் திசைவரை எல்லாத் தேசத்தாராலும், ஜாதியாராலும், பாஷைக்காரராலும் கொண்டாடப்பட்டுப் பரப்பப்பட்டுவரும் கிறிஸ்துவமதத்தின் சரித்திரத்தை வாசித்தோமாயின் அது எத்தனையாக அவிசுவாசிகளாலும், அஞ்ஞானிகளாலும், சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கும் சத்துருக்களாலும் கண்டா கண்டபடி நெருக்குண்டு, நொறுங்குண்டு, துன்பப்படுத்தப்பட்டு வந்தது; இன்னும் துன்பப்படுத்தப்பட்டு வருகிறதென்றும் அறியலாம். என்றாலும் உலகின் எல்லாச் சக்திகளையும், அதிகாரங்களையும், துரைத்தனங்களையும் பார்க்கிலும் கிறிஸ்து வெளிப்படுத்திய பரமபிதாவின் அன்பை "நீங்கள் உலகெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"-மார்க்கு 10 : 15. என அவர் கட்டளையிட்டபடியே சென்று இறைவனுடைய அன்பின் ராஜியத்தைப் பரப்பின பக்தரின் பாரிசத்திலிருந்து கிரியை நடப்பித்த நித்திய சக்தி பெரிதாகக் காணப்படுகிறதன்றோ? இத்தகைய அன்பின் பணியை உலகெங்கும்சென்று நடத்தும்

படி தமது சீஷரை அனுப்புமுன் கிறிஸ்து பெருமான் அவர்களை நோக்கிக் கனிந்த அன்புடனும் அனுதாபத்துடனும் "இதோ அதிகாரிகள் உங்களை வாரினால் அடிப்பார்கள்; சிறைச்சாலையில் அடைப்பார்கள்; காவல் பண்ணப்பட்டவர்களாய் இராஜாக்களுக்கும், நியாயாதிபதிகளுக்கும் முன் கொண்டு வரப்படுவீர்கள்; நீங்கள் அழுது புலம்புவீர்கள்; உலகமோ சந்தோஷப்படும். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவ முண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று ஆறுதலான வசனங்களைக் கூறினார். கூறினபடியே அவர் உயிர்த்தெழுந்து பரத்துக்கேறிய பின்பு சீஷர்கள் அவரைப் பிரஸ்தாபப் படுத்தின நிமித்தம் பலவித இன்னல்களை யடைந்து காவல் செய்யப்பட்டுப் பயமுறுத்தப் பட்டபோது தைரியத்துடன் தங்களை நியாயந்தீர்த்த அதிகாரிகளைப் பார்த்து "தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ? என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமல் இருக்கக் கூடாதே"—அப்போஸ்தலர் 5 : 19 & 20. என்றார்கள் அவரின் சீடர். இவ்வாறு இறைவன் நம்மிலே கிரியை செய்வது உண்மையாயின், நாம் உண்மையாக இறைவனின் அன்பையும் பரிசுத்தத்தையும் கண்ணாரக் கண்டு, மனமாரக் களித்து, அதை ஏனையோரும் கண்டு களிக்க வேண்டுமென விரும்புவது சத்தியமாயின், அப்போது அதற்கான முயற்சியில் நம்மை எத்தகைய அதிகாரியும், பலசாலியும் தடுத்தலரிது. காந்தியைச் சிறையில் வைத்த மாத்திரத்தில் அவர் தம் தேச நன்மைக்கென ஆலோசித்து நிதானிக்கும் எண்ணத்தையும், மன ஆற்றலையும் தடுப்பவர் யாவர்? சிறிது காலம் சிறையில் துன்புறினும் அக்காலம் முடிவுற்று வெளியேறியவுடன் முன்னினும் பதின்மடங்காய் அவரது ஆற்றல் வெளிப்படுமன்றோ? அம்மானிடரின் அரிய சக்தியைக் கடவுள் தானும் தடுப்பவரல்லர். நன்மை தீமையை வகையறுத்து நற்றுறையில் நடக்க மனிதனுக்கு உணர்வையும் ஆற்றலையும் அளித்தவர் அவன் அதைப் பெருக்கி உலகைப் பிரகாசிக்கப் புகுங்கால் தெய்வப் புலவர் கூறுமாப்போல்,

"இடிசெய்வல்என்னும்ஒருவற்குத்தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்"

அன்றோ? அப்படியிருக்க நம் கோயிற் பணி குன்றுதற்கு அது காரணம் இது காரணம் எனச் சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு திரிவதில் யாது பயன்?

பனியன் என்ற ஆங்கிலப் பெரியார் தம்மதக் கொள்கையினிமித்தம் தம் தேசத்தாரால் சிறையி லிருக்கப்பட்ட போழ்தன்றோ தமது ஒப்பற்ற தனி நூலாகிய "மோட்சப் பிரயாணி" என்ற அரிய நூலை எழுதினார். கிறிஸ்துவ மதத்தைப் புறஜாதிகளிடத்தில் பரப்பின பக்தராகிய பவுல் அதற்காகச் சிறைச்சாலையில் இருத்தப்பட்டபோது தானே தம் அரிய நிருபங்களை உலகிற்குப் பொறித்துவைத்துப் போனார்? அவர் அப்போது "நான் கிறிஸ்துவினிமித்தம் கட்டப்பட் டிருக்கின்றேன். ஆயினும் தேவ வசனமோ கட்டப்படவில்லை" என்று ஜெயதொனி முழங்கக் கெம்பீரித்துக் கூறினார். ஆகவே, ஒருவன் தாழ்ந்தோனாகவோ அன்றி உயர்ந்தோனாகவோ இருத்தல் அவனவனது முயற்சியளவே யாகுமென்று நம் பெரியாரும் தமிழ் மூதாதையரும் அடிக்கடி வற்புறுத்திச் சென்றாரன்றோ!

"பெருமையும் சிறுமையும் தான்தர வருமே"

என்றும்,

"நன்னிலைக்கண் தன்னை
நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு
வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்தி
நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்"

என்றும் ஆன்றோர் கூறிய அரிய செய்

யுட்களின் பொருளை உணர வேண்டாவோ ?

ஆகையால் கிறிஸ்து கூறியது போல் நேசனே "உன்கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராது உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன ? நம் ஆலய வழிபாட்டுக்கும் மத சீர்திருத்தத்திற்கும் குறைவும் க்ஷீணதிசையும் உண்டாவதற்கு உண்மையான காரணங்களை ஓர்ந்துநீக்க முயலாது பொருத்தமும் உண்மையு மற்ற பலசாக்குப் போக்கைக் கூறிக்கொண்டு திரிவதில் லாபம் என்ன ? சிலர் கூறுகிறதுபோல் "வைதிகத்திற்கு அடிப்படை லௌகிக"மன்று. கிறிஸ்து கூறுகிறபடி லௌகிகத்திற்கு அடிப்படை வைதிகமாகும் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் கூடக்கொடுக்கப்படும்" என்று கிறிஸ்து கூறுகிற பிரகாரம் துவேஷமும் பகையும் பிரிவினையுமின்றி உண்மையான இறைவனைப் பற்றிய அறிவையும் உயரியபக்தி மார்க்கத்தையும் நம் நாட்டில் பெருக்கி அன்பு, சமாதானம், சத்தியம், நீதி, பரிசுத்தம் இவற்றுலாகிய தேவனின் திரு ராஜ்யத்தை நிலைநிறுத்த முயற்சி செய்யும்போது எனைய இன்னல்களும், அடிமைத்தனமும் தாமே இரிந்தொழியும்.

பதின் மூன்றுவதாக:—கோயிலையும் கோயிற் பணியையும் எள்ளி நம் சிறுவரும் நாகரிகத்தில் தேர்ந்தோரும் நகையாடுதலுக்கு இன்னொரு முக்கிய காரணமுண்டு. ஆரம்பத்தில் இவை ஒரு நல் நோக்கத்தையுடையதாயிருந்திருப்பினும், பின் பல்லாயிரவாண்டுகளாக அவை நம்மக்களுக்கு யாதொரு நன்மையும் காட்டிற்றில வென்பதை அநேகர் உணர்கின்றனர். கோயிலும், கோயிற் குருக்களும், மடாதிபதிகளும் மல்கிக் கிடந்தும், அதனுலும் அவர்களாலும் நம் சிறுவராயினும் பெரியாராயினும் ஒரு சிறிதேனும் ஆன்ம அறிவில் தேறினவருமல்லர்; பயன் பெற்றவருமல்லர். பிற மதங்களிலே காலாகாலத்தில் மதக்கொள்கைகளும், கோயில், கடவுள் இம்மை மறுமை, இருவினை, நரகம், மோட்சம் என்பவற்றைப்பற்றி ஒருவாறு தெளிவான அறிவு பெருகி உலகெலாம் நிரம்பிக்கொண்டு வரும்போது, நம் மதத்தில் அவ்வாறு யாதொரு வெளிச்சமுமின்றி வைதிகஅறிவு அறவேஒழிந்துமறைந்து வருகிறது. நமது மதாசாரியர் பலரால் எழுதப்பெற்ற எண்ணற்கரிய வைதிக நூல்களிருக்கவும் அவ்வறிவு ஒழிந்ததென எவ்வாறு கூறுதல்தகும்என நண்பர் பலர் வினவுதல் கிரமமே. அவற்றில் சிலவற்றைப் படிப்பாருக்குப் பதங்களையும் தொடர்களையும் இலக்கண முறையாகவும் இலக்கிய முறையாகவும் எத்தனை அழகாக நம் பெரியாருக்கும் கவிகளுக்கும் பிணைத்தெழுதத் தெரிகிறதென்றும், எத்தனை ஏராளமான பதங்களை, எத்தனை விதமான மாதிரியில் மாற்றி மாற்றிப் பிரயோகிக்கின்றனர் என்றும் அறிந்து அதிசயிப்பர் என்பது உண்மையே. இத்தகைய சாமர்த்தியத்தில் அவரை உலகில் வேறொருவரும் வெல்லார் என்பதும் உண்மையே. அந்நூற்களில் காணப்படும் தத்துவ அறிவின் துவக்கம் யாது, முடிவு யாது என எளிதிற் காணக்கூடாவிடினும் அது தத்துவ நூலேயென்பது தெளிவுறும். ஆயின், அதனைப் படிப்போரின் ஆத்மதாகத்தையேனும், பசியையேனும் தீர்த்து இறைவனிடம் ஓர் அடியேனும் சமீபமாய் வருமாறு அதனைப் படிப்போர்க்கு அது உதவி செய்கிறதென்ற உணர்ச்சி அதில் கிஞ்சித்தும் கிடையாதெனவே கூறவேண்டியிருக்கிறது. என்னை ? பசித்தவனுக்கு யாது தேவை? ஆகாரத்தைப்பற்றிய அல்லது அக்கத்தைப்பற்றிய அறிவா ? அன்று. ஆகாரமே தேவை. தாகத்தால் விடாய்த்தவன் எதை நாடுகின்றான் ? பாலைப்பற்றி அல்லது பானத்தைப்பற்றிய சாஸ்திரங்களையோ? அன்று; பானத்தையே நாடுவன். அவ்விதமே இவ்வுலகில் முச்சத்துருக்களாலும் எப்பக்கமும் தாக்கப்பட்டு, ஆன்மாவைப்பற்றி

யனவும் சரீரத்தைப்பற்றியனவுமான பலவித போராட்டங்களால் நெருக்குண்டு அறிவிழந்து அந்தரப்படும் மனுக்குலத்திற்குக் கடவுளைப்பற்றிய அறிவும் சாஸ்திரமுமன்று; கடவுளே தேவை. திடதிரவ பதார்த்தங்களைக் கூறுபாடுகள் செய்து அவற்றின் தன்மைகளை முறையே தெளிவுறுத்த வல்ல ஒரு தேர்ந்த ஆசிரியனையும் எட்டாண்டுப் பிராயமுடைய ஒரு சிறுவனையும் தமக்கெதிரே நிறுத்திப் பாலின் விசேஷத் தன்மையை ஒரே வார்த்தையில் அடக்கிக்கூறும்படி ஒரு பாடசாலைப் பரீட்சாதிகாரி கேட்டார். அப்போது பாலைப் பற்றித் தனக்குள்ள மிக விரிந்த அறிவை ஒரே பதத்தில் எவ்வாறு காட்டுவதென சாஸ்திரவல்லான் சற்றுச்சிந்தனையில் ஆழ்ந்திருக்குங்கால், அவனருகில் நின்ற குழந்தை தாமதமின்றி 'இனிப்பாயிருக்கும்' என்று விடையிறுத்தது. வேத சாஸ்திரிகளும் வைதிக ஞானம் நிறைந்தோருமான ஞானிகள் என்னப்பட்டோர் பலர் கடவுளைப் பற்றியும் ஜீவர்களைப் பற்றியும் மிகவாய்ப் பேசி நூல் வரைகின்றனர். ஆயினும் அன்னோரிற் சிலரை 'இறைவன் நம் ஜீவியத்தில் காண்பித்த காட்சிப் பயன் யாதென வினவின், அதைப் பற்றி யொன்றுங் கூற முடியாதென்கின்றனர். தம்மைக் கற்றறிந்தோராய்க் கழறிக்கொண்டு திரியும் பெரியாரையணுகி உண்மை யறியும் உயரிய நோக்கத்துடனே சில வினாக்களைக் கேட்குங்கால், அன்னோர் வெகுண்டு 'பக்குவமடைந்தார்க்கன்றி இவ்வுயர்ந்த சித்தாந்தம் புலனாகா' தென்றும், இன்னும் பலவாறான வீண் விடையிறுத்தும் விடுகின்றனர். வேதமும் வாக்களிப்பதுபோல் "என்னைக்கேள்....நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியில் உன்னை நடத்துவேன்....உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்... உனக்குப் பிரயோசனமான யாவற்றையும் போதித்து நீ அறியாத பெரிய காரியங்களை உனக்குக் காண்பிப்பேன்" என்று நம் வேதங்களும் போதங்களுமாவது தம்மைக் கிட்டியவரைப் பல ஞானப் பொருளில் பிரகாசிப்பிக்க வேண்டும்; இன்றேல் அதிற் றேறிய ஞானியோர் என்னப்பட்டாராவது வேத போதகத்தின் பல பொருளைப் பற்றித் தம்மை வினவுவார்க்குத் தக்க விடையிறுத்து ஆன்ம தாகத்தைத் தீர்த்தல் வேண்டும். அவ்வாறின்றி வேதத்தாலும், அதனை யோதும் பெரியாராலும் தாம் போதிக்கப் பெறாதிருப்பதோடு, தாமே சென்று போதனையையடைய ஆர்வங்கொண்டகாலத்திலும் அதனைப் போதிப்பாராலும் எள்ளி நகையாடப்பட்டுப் பலவித வசைச்சொற்களைச் செவியுறுவதென்றால், நம் இளைஞரும் நாகரிகத்தில் தேர்ந்தோரும், நம் கோயிலையும் கோயிற் பணியையும் குருக்களையும் ஞானியோரையும் இகழ்ந்து நகையாடுவது ஓர் ஆச்சர்யமன்றே. கடவுள், ஜீவன், ஆன்மா, மோட்சம், நரகம், தீமைமுதலிய நித்தியப்பொருளை யறியவேண்டின் நாம் கொண்டொழுகும் வேதங்களை யன்றிப் பிற வேதங்களையும், ஆராய்தல் தம் பெருங்கடனென அறிவுடையார் உணர்தலே யன்றித் தம்மையடைந்து ஞானம்பெறவிரும்பும் இளைஞரையும் அத்தகைய பல வேத ஆராய்ச்சித் துறையில் புகுத்தலன்றே உத்தமமாய்-உண்மையான கடவுளுக்கு முன் பிரியமுமாய்க் காணப்படும்.

பதினான்காவதாக:—உருவும், திருவும், ஆற்றலும், அறிவும் நிறைந்து விளங்கும் நம் பாலர் இவ்வுலகிற் காணப்படும் பலதிறப்பட்ட இயற்கை வனப்பினையும், அதனை ஆக்கியோனாகிய இறைவனது மாட்சியையும் கண்டு ருசித்துக் களிய முன்னரே, அவரது புத்தி, சித்தம், அறிவு செயலை மந்தப்படுத்தித் தடைசெய்யக் கூடிய யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை யென்னப்படும் கொள்கைகளை அன்னோருக்குமுன் போடுவதாலும், அகவாலயம் புறவாலயமாகிய ஆலயங்களைப் பற்றிய சிறந்த நோக்கம் நம் சிறுவர்க்கில்லாது போகின்றது

என்னலாம். என்னை? "அரிதரிது மானிடராதலரிது" என்று இம்மானிடப் பிறவியை நம் பெரியார் எத்துணையாய்ச் சிறப்பித்திருக்கின்றதை நம் இளைஞர் பார்க்கின்றார்; மனுக்குலத்தின் அருவ செயலின் சரித்திரத்தை அவர் படிக்கின்றார்; யாக்கை, செல்வம், இளமை முதலியவற்றால் உலகிலுண்டாகும் பல நற் பயன்களையும் புகழ்ச்சிக்குரிய செயலையும் தாமே நேரிற் கண்டுணர்கின்றார்; அன்றியும் இந்நிலைமைகளைப் பற்றி வெகுவாய்ப் போதிக்கும் பலரும் இவ்வுடலையும் இளமையெழிலையும் பாதுகாக்கும் பொருட்டு எத்தனையோ திறப்பட்ட முயற்சி யெடுக்கின்றதையும், "திரைகடலோடியும் திரவியந் தேடு" என்ற முதுமொழியைக் கடைப்பிடிப்போர் போன்று செல்வத்தை நட்டும் எத்தனையோ துறைகளைக் கண்டு அதிற் செல்லுகின்றதையும், நம் குழந்தைகள் காண்கின்றன. இன்னோர் பலவித நிலையாமைப் பற்றிக் கேட்கும்போது சிலர் அதை எள்ளி நகையாடுவதிலும், வேறுசிலர் இதனால் தாக்கப்பட்டுத் தம் முயற்சியால் 'இவ்வுலகில் பயனின்று' எனக்கூறிக் காரியம் செய்தலை விடுத்துத் தூங்கி விழுதலும் ஓர் அதிசயமா! இவ்வாறு அவர்கள் செய்யாதிருக்க நாம் விரும்பின், மானிடப் பிறப்பின் பெருமையையும், உலகமாதா அதற்கீயும் பல செல்வங்களின் உயர்வையும் உண்மையிற் கண்டு உயர்ந்த பயனடையும் வழிகளைக் காட்டல் அறிவுடையோர் கடனாகும்.

உடலையும் உயிரையும் உலகளிக்கும் அகில பொருளையும் எவ்வாறு வளர்ப்பதென்று நன்கறியும் மேனாட்டார் அவைத் தம் சாதனையாலும் போதனையாலும் தம் இளைஞருக்குணர்த்தி வருவதாற்றானே அன்னோர் பற்பல அரிய சாஸ்திரங்களிலும், செல்வத்திலும் பெருகி, நம்மிலும் நாகரிகத்திற் பின்னிட்டுக்கிடந்த அன்னோர் இப்போது பல்லாயிரமாக நம்மிலும் பெருக்கமடைந்து ஊர்ந்து, நடந்து, ஓடி, பறக்கின்றனர். நம்மக்களோ தமக்குள்ளனைத்தும் இழந்து உரிமையிழந்து உயிரிழக்கும் நிலையிலும் வந்திருக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் நம்மக்கள் தம் உடலையும் உயிரையும் பொருளையும் உயர்ந்த பயனுக்கு உட்படுத்தாவாறு பலவித இருண்டதும் உற்சாகமற்றதும் உயிர்க்கொல்லியுமான கொள்கைகளையும் வேதங்களையும் சாஸ்திரங்களையும் கவிகளும் கலைஞரும் அவர்களுக்குமுன் போட்டுத் தடை செய்திருந்ததே என்று கூறல் மிகையாகாது. "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோம்; அவர்கள் சமுத்திரத்து மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள்" என்றும் "சகலத்தையும் உன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினேன்" என்றும், "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார்; நீங்களே அந்த ஆலயம்" என்றும் இவ்வாறுக் கிறிஸ்துவ சத்தியவேதங் கூறுதல் மானிடப் பிறவியை மிக உன்னதமானதாய் உயர்த்திப் பாடியிருக்கும் நம் தமிழ்ப் பெரியார் கூற்றுகளுக்குச் சார்பாகவே யிருக்கின்றது. இத்தகைய சத்தியங்களை ஒருவாறறிந்த திருமூலநாயனார் போன்ற பெரியாரும்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே"

எனக் கூறிப் போந்தனர். இவ்வுண்மையை நாமும் அறிந்து இவ்வரிய உடம்பை நோயின்றி வளர்க்கும் ஆட்சியையே யன்றி, அந்த அசுத்தம், துர் இச்சை, மோகம், காமவிகாரம் இவற்றால் கறைபடாமல் காத்துப் போற்றப் பூவுடம்பை நாட்டும் போதனையையும் சாதனைகளையுமே விசேடமாக நம் இளைஞர்க்கு முன் காட்டல் தேவை. அப்போது நிலையாமையுடையனபோற்றோன்றும் அழகு, செல்வம், அறிவு முதலிய இறைவன் அளித்த நல் ஈவுகளை

அவருக்குப் பிரியமான அறையில் பெருக்கிப் பெரும் பயனையாக்கித் தம்மைப் பேரின்பவெள்ளத்தில் திளைத்து நிற்கப் பாத்திரராகும் பெரியாராக்கி, "எல்லா நல்ல ஈவுகளுக்கும் பூரணவரங்களுக்கும் இருப்பிடமாகிய ஜோதிகளின் பிதாவின் திருப்பார்வையில்" எல்லாவற்றையும் நிலைத்த பொருளாகக்காட்டி இன்புற நம் இளைஞர் கற்றுக்கொள்ளுவர். நம் ஆசவாலயம் அன்னோரால் சிறப்பிக்கப்படும்போது கடவுளின் புறவாலயத்தைப்பற்றிய உயரிய சிந்தையும் நோக்கும் அவருக்குப் புலனாகும். அப்போது ஆலயத்தையும் அதன் பணியையும் சீர்தாக்க நம் சிறியோர் முன் வருவர்.

பின்னும் "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்ற நம் பெரியாரின் நற்போதனையைச் சிரமேற் கொண்டொழுகவேண்டுடன் ஒன்று கவனிக்க வேண்டும். அகில வுலகையும், அதிலடங்கிய ஆன்மக்குழுவையும் பிரகாசிப்பிக்கும் நம்மிறைவனை வெளிச்சமாகவே ரூபகம் செய்து,

"சோதியே சுடரே சூழொளி விளக்கே"

என்றும்,

"கண்ணின் மணியிருங் கருமணியினுள்ளொளி
ஒள்ளின் ஒளிரு மொளிவிளக்கு" [போ

என்றும்,

"பெருகிய கோடிகள் திரட்பிரகாசமாய்
வருமொரு பெருங்கதிர் மதியம்போலவே
கருணை வீற்றிருந்த செங்கமலக்கண்ணினன்"

என்றும் பலவாறாக நம் பக்தகுழாங்கள் பாடிக் களித்தன. எம்பரிசுத்த வேதாகமாகிய கிறிஸ்தவரது பைபிளிலும் கடவுளை ஜோதியாகவே, துவக்க முதல் முடிவுவரை கூறியிருக்கின்றனர் பக்தர். "ஒருவரும் சேரக்கூடாத ஜோதியில் வாசமாயிருக்கிறவர்" "ஜோதிகளின் பிதா", "நீதியின் சூரியன்"; "உலகத்தில் பிறந்த எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கும் மெய்யான ஒளி இவரே" தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை;......நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்கள்" என்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். "நீங்கள் எல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறீர்கள்"—நாம் இராவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால் நாம் தூங்காமல் விழித்துக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து விசுவாசம், அன்பு, நம்பிக்கை முதலியவற்றையுடையவராகி "அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக் கடவோம்" என்பனவும், இவைபோன்ற எண்ணிறந்த சத்தியவசனங்களும் இறைவனைச், சுத்தமயானந்த சோதி சொரூபனாகவே கண்டு காட்டியிருக்கின்றன. இவ்வாறான திருச்சோதி உறைவிடமாகிய கோயில்களும் அச்சோதியின் தன்மையை அங்குக் கடவுளை வழுத்த வருவார்க்கு நினைப்பூட்ட வேண்டாமோ? அப்படியிருக்க நம் கோயில்களும் திருஸ்தலங்களும் பெரும்பாலும் எங்கணும் இருள் நிறைந்து, சுவாசிக்க நற்காற்றுப் புக இடனின்றித் தூரிஞ்சலும் பிறவும் தங்கி அசுத்தம் செய்யக்கூடியவைகளாய் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையைக் கூடியமட்டும் ஒருவாறுமாற்றி அதில் வழிபாட்டின் பொருட்டுக் கூடுவோருக்கு மனதிற்கும் சரீரத்திற்கும் இளைப்பாறுதலையும் அமைதியையும் தரத்தக்கதாய்ச் செய்தல் அத்தியாவசியம்.

அன்றியும் ஆங்காங்கு நூற்றுக்கணக்காயினோர் ஏககாலத்திற் கூடும்படியான மேடைகளும், உபந்நியாசப் பீடங்களும் கோயிற்குள்ளாகவேயமைத்தல் நலம்.

ஊழும் - முயற்சியும்

[திரு. மு. ரா. அருணாசலக் கவிராயர்]

இவ்வுலகத்தை ஆக்கியளித்தழிக்கும் இறைவன் எல்லாப் பிராணிகளுடைய இதயத்தும் விளங்கிநின்று, அப்பிராணிகள் செய்தற்குரிய கர்மங்களெல்லாவற்றையும் முறையே செய்து வருமாறு அவைகளை நியமித்து வருகின்றானென்றும், அவ்விறைவன் நியமனமின்றியே பிராணிகள் எக்காரியத்தையும் செய்யு மாற்றலுடையன வல்லவென்றும், ஜீவான்மா தான் சுவதந்தரனாகாது, பரமான்மாவின் நியமனத்தாலேயே எல்லாக் காரியங்களையும் இயற்றுகின்றானென்றும் அநேகர் கருதுகின்றனர். அறிஞர்கள்கூட, தமக்குத் துக்கம் நேருங்காலத்தில் 'இப்பாழுந் தெய்வம் இவ்வாறு செய்து விட்டது; தெய்வத்துக்குக் கண்ணில்லை' என்றிவ்வாறாகக் கூறிவிடுகின்றனர். இங்ஙனம் தெய்வத்தாற் சகலகாரியங்களும் நடத்தப்படுகின்றன என்பதுண்மையானால் இறைவன் நியமனப்படி நடந்துவரும் ஜீவனுக்கு சுகதுக்கங்கள் உண்டாதல் நியாயமாமா? மனிதனுக்கு சுவதந்திரமில்லையாயின் அவன் வருந்தி முயற்சி செய்வதாற் பயனென்? இவ்விஷயங்களைச் சிறிது ஈண்டு ஆராய்வோம்.

ஈசுவரன் ஒவ்வொரு பிராணியையும் தன் நியமனம் போலவே நடத்துகிறானென்றும், பிராணிகட்கு சுவதந்திரமாக ஒன்றுஞ் செய்யும் ஆற்றலில்லையென்றும் சொல்வதற்கு, "தேநவிநா த்ருணமபி நசலதி"—"அவனன்றியோரணுவுமசையாது" என்பது போன்ற சுருதிகளைப் பிரமாணமாகச் சொல்வர் சிலர்; பின்னுஞ் சிலர், இறைவன் ஆணைப்படியே பிராணிகள் எல்லாக் கன்மங்களையும் செய்கின்றனவாயினும் ஜீவனுக்குச் சிற்சில அற்ப விஷயங்களில் பகவான் சுவதந்திரமளித்திருக்கிறார் என்று கூறுவர். இவ்வாறு, பிராணிகள் நல்வினை தீவினைகளைச் செய்வதற்கு நியாமகன், தெய்வம் அல்லது ஈசுவரனே என்று நம்புவது பெருந்தவறான அபிப்பிராயமாகும். பகவான், ஒவ்வொரு பிராணியையும் "இன்ன கல்வியை அப்பியசி; இன்ன வியாபாரத்தைச் செய்; இன்ன ஸ்திரீயை மணம் புரிந்து இவ்விதம் அநுபவி; இன்னின்ன ஆகாரத்தை உண்; கொலைசெய், திருடு, அசத்தியஞ்செய்" என்றிவ்வாறு நியமித்துவர, அவ்வாறே உலககாரியங்கள் நிகழ்கின்றன என்பதாயின், ஈசுவரனைவிடத் துக்கியாவாரொருவனுமிரான். ஏனெனில், ஒவ்வொருநாளும் ஈசுவரன் அவ்வப்பிராணிகட்கு, அவை செய்யவேண்டிய வேலைகளைத் தெரிந்தெடுத்து நியமிக்க வேண்டிய பெரும்பாரம் அவனைப் பெரிதும் பொறுக்குமன்றோ.

அன்றியும், இறைவன் கட்டளைப்படியே நடப்பவன், செய்து போந்த காரியங்களாலுண்டாகும் சுகதுக்கம், புண்ணிய பாவம், சுவர்க்க நரகம் முதலியவை, நியமித்தவனை அடையுமேயன்றிப் பராதீனனாய்ப் பகவான் ஏவற்படி நடந்த ஜீவனைச் சாராவாம். இன்னும், மனிதன் அறிந்து அனுஷ்டிப்பதற்கன்றோ, சுருதி ஸ்மிருதி இதிகாச புராணாதி சாஸ்திரங்கள் ஏற்பட்டுள்ளன? மனிதனுக்குச் சுதந்திரமில்லையாயின், இந்த சாஸ்திரங்களும் பயனற்றவைகளாம். ஏனெனில், சத்கருமங்களைச் செய்தவனுக்கு நற்பயனையும், துஷ்கருமங்களைச் செய்தவனுக்குத் தீப்பயனையும் சாஸ்திரங்கள் விதிப்பது வீணன்றோ? இனி, சிற்சில அற்பவிஷயங்களில் மட்டும் மனிதனுக்கு சுவதந்திரமேற்பட்டுளதென்பதுந் தவறானதே. ஏனெனில், 'இன்னின்ன காரியங்களில் மனிதன் சுவதந்திரன்; இன்னின்னவற்றைச் செய்ய பகவானே ஏவுகிறார்' என்று சாஸ்திரங்களில் யாதோர் நியமனமுஞ் செய்யப்பட்டதில்லை. இல்லையாகவே, எதனைக்கொள்

வது, எதனைத் தள்ளுவது என்று ஒன்றுமறிதலின்றி மனிதன் காரியங்களைச் செய்தலுங் கூடாவாம்.

இவற்றால், மனிதன் ஸர்வசுவதந்திரமுள்ளவனென்றும், அவன் செய்யுங் காரியங்கள், நல்லது கெட்டதென்பவற்றைச் சாஸ்திரங்களைக் கொண்டு தன் புத்தியால் நிச்சயித்து அதன்படியே ஒழுகக்கடமைப் பட்டிருக்கிறானென்றும், அங்ஙனம் அறியாமல் தீவினைகளைச் செய்வதனா லுண்டாம் பயனை, அவனே அடைதற்குரியனென்றும், "ஸாக்ஷீசேதா கேவலோ நிர்க்குணச்ச" என்னும் சுருதிவாக்கியப்படி, ஈசுவரன், யாதொரு விகாரமுமின்றி ஜீவர்களது செய்கையைப் பார்த்துக் கொண்டு சாக்ஷியாய் மட்டுமுள்ளானேயல்லது, அவனுக்கு வேறு சம்பந்தமொன்றும் இல்லையென்றும் நாம் தெளிவாக ஊகித்தறியலாம். ஆகவே, ஈசுவரன் துக்கத்தைக் கொடுத்தான், சுகத்தை யளித்தான் என்பது முதலிய அபிப்பிராயங்கள் தவறானவையே. மனிதனுக்குச் சுகதுக்காதி யனுபவங்கள் தன்னுடைய பூர்வகர்மத்தின் பலனாகவுண்டாகின்றனவே யன்றி, இறைவன் அவ்வனுபவங்களை யளிக்கிறானென்பதில்லை. மனிதன் தன்னுடைய முயற்சியினாலேயே நற்கதியடைதற்குரியனென்பதே சாஸ்திரங்களின் நிச்சயம்.

"நன்னிலைக்கட் டன்னை
நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு
வானு நிலையினும்
மேன்மே லுயர்த்து
நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந்
தான்." —(நாலடி)

இது விஷயம், மஹாபாரதம் அநுசாஸநிகபர்வம் ஆறாம் அத்யாயத்தில், மிக அழகாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பிரமதேவரைப் பார்த்து, அவர் புத்திரரான வசிஷ்ட மஹருஷி, "தெய்வம் சிறந்ததா? ஆள்வினை (முயற்சி) சிறந்ததா?" என்று வினவ, பிரமதேவர் அடியில் வருமாறு கூறுகிறார்: "விதையன்றி ஒன்றும் (மரம் செடி கொடி) உண்டாவதில்லை. விதையன்றி (தானியமுதலிய) பலனுமில்லை. விதையினாலேயே விதை யுண்டாகின்றது. உழுது பயிர்செய்வோன், பூமியில் எப்படி விதையை விதைக்கின்றானோ, (அந்த விதை) நல்லதோ கெட்டதோ அதற்குத்தக்க பலனை யடைகின்றான். விதை விதைக்கப் பெறாத பூமியானது எங்ஙனம் பலனையளியாதோ, அவ்வாறே தெய்வமானது (சஞ்சிதகர்மம்) *புருஷனுடைய பிரயத்தனமன்றிப் பலனைக் கொடாது. புருஷப்பிரயத்தனம் பூமியினுடைய ஸ்தானமாகவும், தெய்வம் விதையினுடைய ஸ்தானமாகவுஞ்சொல்லப் படுகிறது. பூமியினுடையவும் விதையினுடையவும் சேர்க்கையினாற் பயிர்கள் விருத்தியடைகின்றன. கருமத்தைச் செய்கிறவன் அக்கருமத்திற்குரிய முழுப்பயனையும் தானே அநுபவிக்கின்றான். உலகத்திற் செய்ததுஞ் செய்யாததுமாகிய (கரும) பலன் பிரத்தியக்ஷமாகக் காணப்படுகிறது (எங்ஙனமெனில்) சுபமான கர்மத்தால் சௌக்கியத்தையும் பாபகர்மத்தால் துக்கத்தையும் அநுபவிக்கிறார்கள். எந்தக் கருமமானது செய்யப்பட்டதோ, அதன் பலன் எவ்விடத்திலும் (லோகாந்தரங்களிலும்) உண்டாகிறது. செய்யப்படாதது சிறிதேனும் அநுபவிக்கப் படுகிறதில்லை. (நற்கருமம்) செய்தவன் பாக்யத்துடன் கூடிய நிலைமை எங்கும் அடைகின்றான். செய்யாதவனோ காரம் வைக்கப்பட்ட புண்போல எரிக்கப்படுகிறான்..........தேவதைகள், நாகங்கள், யக்ஷர்கள், சந்திரன், சூரியன், வாயு, மற்றுமுள்ள ஒளிபொருந்திய நக்ஷத்திரகிரகாதிகள் — இவர்களெல்லாம், மனிதர்களாயிருந்து புருஷப் பிரயத்தனத்தாலேயே தேவத்துவத்தையடைந்தார்கள்.......உலகத்தில் தெய்வத்தை

* "தெய்வம், ஊழ், பால், முறை, உண்மை, நியதி, விதி என்பன ஒரு பொருட் சொற்கள்."

எதிர்பார்த்து அலக்ஷியமாய (ஒன்றுஞ் செய்யாமல்) இருக்கக் கூடாதன்றோ. எவன் மனிதன் செய்யவேண்டிய கர்மத்தைச் செய்யாமல், தெய்வத்தை எதிர்பார்க்கிறானோ, அவன் நபும்ஸகனைக் கணவனாயடைந்த மனைவிபோல் வீணாக சிரமத்தையடைகிறான். சுவர்க்கலோகத்தில் அந்நியனால் (அசுரரால்) எப்படி பயமுண்டாகிறதோ அப்படி, மனுஷியலோகத்தில் அந்நியனால் பயமுண்டாகிறதில்லை. (ஆனால்) சுபாசுப கருமங்கள் பயத்துக்குக் காரணமாகின்றன. செய்யப்படும் புருஷப் பிரயத்தனமாகிற கருமமானது தெய்வத்தைப் பின்றொடர்கிறது........கருமமில்லாமற்போனால் தெய்வம் எப்படியிருக்கும்? (என்றால், சஞ்சிதகருமத்துக்கு இருப்பில்லையென்பது கருத்து) எப்படித்தான் பலனைக்கொடுக்கும்? மனிதன் தனக்குத் தானே பந்து; தனக்குத்தானே சத்துரு; தபஸ், நியமம் இவற்றோடு கூடினவர்களாயும் கடின விரதமுள்ளவராயுமிருக்கிற முனிவர்கள் தெய்வபலத்தாலேயோ சாபத்தைக் கொடுக்கிறார்கள்? இல்லை. ஆனால் தபஸ் முதலிய கருமபலத்தாற்றான். உலகத்தில் எந்த மனிதன் மிகவும் அரியவற்றையெல்லாம் அடைந்து பாவத்தை நீக்கிக்கொள்ளுகிறானோ அவனையும், லோபமோகங்களையுடைய மனிதனையும் தெய்வம் ரக்ஷிப்பதில்லை. அக்கினியானது அற்பமாயிருந்தாலும் காற்றாலசைக்கப் பட்டால் எவ்வாறு விருத்தியடைகிறதோ, அதுபோல, சஞ்சிதகருமமாகிற தெய்வமானது புருஷப் பிரயத்தனத்தோடு சேர்ந்து நன்றாய் விருத்தியடைகிறது. எண்ணெயில்லாது போனால், தீபமானது எவ்வாறு குன்றுமோ, அவ்வாறு மனிதன் முயற்சியில்லையாயின் கருமமானது குன்றும்......இவ்வுலகத்தில், தெய்வமானது, (கருமபலனை) வேறுவிதமான பலனையுடையதாக வேனும், விரோதமான பயனை அளிப்பதாக வேனும் செய்கிறதில்லை. தெய்வமானது, இந்த விஷயத்தில், பிரபுவாக ஆகிறதில்லை.''

இவ்வாறே, மச்சபுராணம், உஉ-ம் அத்யாயத்து "முந்திய ஜன்மங்களில் அடைந்திருந்த தேகத்தினாலே சம்பாதிக்கப்பட்ட தன்னுடைய கருமமே தெய்வமென்ற பெயருடையதென்றறி; ஆகையால் இவ்வுலகத்தில் புருஷப்பிரயத்தனமே சிரேஷ்டமானதென்றறி." என்று கூறப்பட்டிருத்தலோடு, பகவத் கீதையிலும், (அத். சு. ச. சு.) (ஒவ்வொருவனும் தன்னாலேயே தன்னைக் கரையேற்றிக் கொள்ள வேண்டியது. தன்னைக் கெடுத்துக் கொள்ளலாகாது; (ஏனென்றால்) தனக்குத்தானே பந்து; தனக்குத் தானே சத்துரு" என்று கூறப் பட்டிருக்கிறது.

இப்பிரமாணங்களால், புருஷப்பிரயத்தனத்தாலே சம்பாதிக்கப்பட்ட கருமபலனானது தெய்வமென்கிற பெயரால் சொல்லப் பட்டிருக்கின்றதேயன்றி, ஈசுவரன் அல்லனென்பது தெளிவாகின்றது. இவ்வாறே, அமரத்திலும் சப்தஸ்தோமத்தும் சொல்லப்படுகின்றது. இனி, கருமங்களுக்குப் பலனையளிப்பவன் ஈசுவரனல்லனென்றால் நியாமகன் என்று அவனை எவ்வாறு சொல்லக் கூடுமெனின், இறைவன் ஆணைக்கு அஞ்சியே சகலரும் தத்தந் தொழிலைச் செய்கிறார்கள்; அவன் சாக்ஷிபூதனாக நிற்றல் மாத்திரையே என்க. இதேவிஷயம், கடவல்லியுபநிஷத் (சு. ந.) தில் "இந்தப்பரமான்மாவுக்கு பயந்து தான் அக்கினியும், சூரியனும் பிரகாசிக்கிறார்கள்; இந்திரனும் வாயும் யமனும் தத்தம் தொழிலைச்செய்கின்றனர்" என்று வருதல் காண்க.

இக்கருத்துக்களை உட்கொண்டே, தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், தமது அருமைத்திருக்குறளில், தெய்வமாகிய ஊழை புணர்த்த ஊழதிகாரமும், முயற்சியின் வலியை புணர்த்த ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை என நான்கு அருமையான அதிகாரங்களையும் அடுத்தடுத்து அமைத் தருளினார்.

இவற்றுள்:—ஊக்கமுடைமை யாவது, மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கட் கிளர்ச்சியுடைத்தாதல்; மடியின்மையாவது கருதியன செய்யுங்காற் சோம்புத லில்லாமை; ஆள்வினை யுடைமையாவது, சோம்பலில்லா விடத்தும் மென்மேலும் முயற்சியிருந்தாலன்றிக் காரிய முடியாதாகையால், இடைவிடாமுயற்சி; இடுக்கணழியாமை யாவது, தொழிலில் முயல்பவன் தெய்வத்தானாக பொருளின்மையானாக மெய்வருத்தத்தானாக துன்பம் நேரிட்ட விடத்து மனங்கலங்காமை; இவ்வாறு முயற்சியை எதிர்மறை முகத்தாலும் உடன்பாட்டு முகத்தாலும் தெய்வப் புலவர் வற்புறுத்தியதை நோக்குமிடத்து ஊழினும் அதன்வலி பெரிதும் விளங்குகின்றதன்றோ. இக்கருத்து அடியில்வருந் திருக்குறள்களில் தெளிவாகவும் கூறப்படுகின்றது.

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

குடிசெய்வ லென்னு மொருவதற்குத் தெய்
மடிதற்றுத் தான்முந் துறும். [வ

"சேந்தமிழ்"

இடியேறு

கட்சிகள்

உரிமையில்லா நாட்டில் அரசியல் கட்சிகள் பல இருத்தல் கூடாதென்று நாம் பலமுறை எழுதியுள்ளோம். உரிமையில்லா நாட்டில் அரசியல் கட்சிகள் பல இருந்தால் என்னை? அக்கட்சிகள் உரிமை வேட்கைக்கே பல வகையிலும் இடர்செய்த வண்ணமாயிருக்கும். அவைகள் உட்கலகத்தையும் பிணக்கத்தையும் பெருக்கிக்கொண்டே போகும். இன்னோரன்ன பிற்போக்கு நிகழ்ச்சிகள் பலபடக் கூறலாம். ஆகவே உரிமையில்லா நாட்டில் பலதிற அரசியல் கட்சிகள் தோன்றாதவாறு தேசபக்தர்கள் காத்து வருதல் வேண்டும்.

நமது நாடு உரிமை யில்லாதது என்பது வெள்ளிடைமலை. உரிமையில்லா நாட்டின் இயல்புகள் பல நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருதலுங் கண்கூடு. நாட்டில் பிற்போக்குக் கட்சிகளும், வகுப்புக் கட்சிகளும், உட்பிணக்குகளும், இன்ன பிறவும் தோன்றிய வண்ணமாயிருக்கின்றன. இவைகளால் நாட்டுக்கு நலன் விளையுங்கொல்?

மிண்டோ-மார்லி சீர்திருத்தம்வரை நாட்டில் பலதிற அரசியல் கட்சிகள் தோன்றாமலிருந்தன. இரண்டொரு கட்சிகளிருந்தாலும் அவைகள் ஆக்கம் பெறாமலே கிடந்தன. அவைகளின் பெயரால் தேர்தல் நடைபெற்றதில்லை. மிண்டோ-மார்லி சீர்த்திருத்தத்தில் இரட்டை ஆட்சிமுறையின்மையாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுள் மந்திரி சபை அமைவதின்மையாலும் பலதிற அரசியல் கட்சிகள் தோன்றுதற்கு இடமில்லாதிருந்தது. பின்னே முளைத்த மாண்டேகு-செம்ஸ்பார்ட் சீர்திருத்தம் இரட்டையாட்சியைக் கோலினமையால், மந்திரிசபை அமைப்புக்குக் கட்சிகள் தேவையாயின. முழுஉரிமையுள்ள நாட்டில் கட்சிகளிருப்பதாலும், அக்கட்சிகளின் வாயிலாக மந்திரிசபை அமைவதாலும், தீமை விளையாது. உரிமை இல்லா நாட்டில் தோன்றும் அரசியல் கட்சிகள் உட் பிணக்கை வளர்த்து வருவதிலேயே தங்கள் காலத்தைக் கழித்துவரும். அப் பிணக்கிடை உரிமை வேட்கை எளிதில் எழுமோ?

நமது நாட்டில் அரசியல் கட்சிகளின் நிலைமை எவ்வாறிருக்கிறது? சொல்லவும் வேண்டுமோ? தேர்தல் ஒன்றே சுயராஜ்யப் போராட்டமாகக் கருதப்படுகிறது. அதில் விளையும் வெற்றி சுயராஜ்யப் பேறாகக் கொள்ளப்படுகிறது. உரிமையில்லா நாட்டில் கட்சிகள் போரால் நடைபெறும் தேர்தல்களை உரிமை வேட்கையைக் கொல்லும் நச்சுப்பேய்கள் என்று கூறலாமன்றோ? மாண்டேகு-செம்ஸ்பர்ட் சீர்திருத்தம் நாட்டைக் கட்சிப் பிணக்கில் வீழ்த்தி வருவதை விளக்கிக் கூற வேண்டுவதில்லை.

இனி வரப்போகுஞ் சீர்திருத்தம் நமது நாட்டு மக்களைப் பல வழியிலும் பிரித்துப் பிரித்துவிடுமென்பதில் ஐயமில்லை. நாடோ சாதி மத வேற்றுமைகளால் பிரிவுண்டு கிடக்கிறது. இத்தகை நாட்டில் மேலும்மேலும் பிரிவுகளை உண்டாக்குஞ் சீர்திருத்தம் வரின் தேசத்தின் நிலை என்னாம்? வரப்போகுஞ் சீர்திருத்தத்தைத் தடைசெய்தல் இயலுமா? இயலாது. எத்தகைச் சீர்திருத்தங் கிடைப்பினும், அதனுடன் ஒத்துழைக்கக் ‘கற்றவர்கள்’ முனைந்து நிற்கிறார்கள். ஆகவே, சீர்திருத்த நிலைமையைப் பற்றி நாம் இப்பொழுது ஒன்றுங் கூற விரும்புகிறோமில்லை. வருஞ் சீர்திருத்தம் எக்கண்ணுடன், எம்மூக்குடன் வரினும் வருக. அதைப்பற்றிய சிந்தனை வேண்டுவதில்லை. அதனால், நாட்டில் உரிமை வேட்கை குறையாதவாறு பாதுகாக்கவேண்டுவது தேச பக்தர்கள் கடமை. இதற்கு என் செய்வது? இங்கே தேசிய மகாசபையாகிய காங்கரஸைக் கருத்திலிருத்தினால் வழி தானே பிறக்கும்.

பலதிறப் பிரிவுகளிடை - பிணக்குகளிடை-நாட்டின் நலன் கருதிக் காணப்பெற்றது தேசிய மகாசபையாகிய காங்கரஸ். அம்மகாசபை தன் கடனை ஒருவாறு ஆற்றிக்கொண்டே வருகிறது. இந்நாளில் இந்திய நாட்டில் ஒருவித தேசிய உணர்ச்சி எழும்பியுள்ளது எனில், அதற்குக் கால் கொண்ட பெருமை காங்கரஸினுடையது என்றே கூறுதல் வேண்டும்.

காங்கரஸ் தொடக்கத்தில் உத்தியோக வேட்டையில் தன் கருத்தைச் செலுத்தி வந்தது. அந்நோக்குடனே சிலர் காங்கரஸை நடாத்தி வந்தனர். பின்னே, பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய், விபினசந்திரபாலர், அரவிந்தகோஷ், டாக்டர் பெஸண்ட் முதலியோர் முயற்சியால் காங்கரஸில் தேசிய விதை அதாவது சுதந்திர தாக விதை விதைக்கப்பட்டது. அந்நாள் தொட்டுக் காங்கரஸ் நோக்கம் வேறு வழியில் திரும்பலாயிற்று. அத்திருப்பத்துக்குக் காரணராக நின்றவர் மகாத்மாகாந்தியே யாவர். ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டாகக் காங்கரஸ் மகாத்மாகாந்தி வழியாகவே இயங்கி வருகிறது என்று கூறல் மிகையாகாது.

காந்தியடிகள் தலைமையில் காங்கரஸ் இருமுறை ஒத்துழையாப் போர் துவங்கிற்று. அப்போரில் நாடு பெரிதும் விழிப்புக்கொண்டது என்பதில் ஐயமில்லை. காந்தியடிகளால் தொடங்கப்பெற்ற அப்போரால் வெற்றி விளைந்ததா தோல்வி விளைந்ததா என்று ஆராய்வது அறிவுடைமை யாகாது. வெற்றிக்கோ தோல்விக்கோ காந்தியடிகள் பொறுப்பாளியல்லர். வெற்றி-தோல்வி கேள்வியைத் தேசத்தை நோக்கியே கேட்டல்வேண்டும். அக்கேள்வியைக் காந்தியடிகளை நோக்கிக் கேட்டல் கூடாது. அவர் என் செய்வார்! நேரிய முறையில் அவர் போரை நடாத்தினார். தேசம் அப்போருக்கு இன்னும் தன்னைப் பண்படுத்திக் கொள்ளவில்லை. ஆகவே போரை நிறுத்தவேண்டிய கட்டுப்பாடு காந்தியடிகளுக்கு அடிக்கடி ஏற்பட்டு விடுகிறது.

“காந்தியடிகள் போரில் தோல்வியுற்றார்” என்று சிலர் கூறிய வண்ணமாயிருக்கிறார். “காந்தியடிகள் தோல்வியடையவில்லை; தேசம் தோல்வியடைந்தது” என்பதை உணர்ந்து நடந்தால் எதிர்காலத்துக்கு நலம் விளைதல்கூடும்

என்பதைச் சகோதரர்கள் உணர்ந்து நடப்பார்களாக.

ஒத்துழையாமைப் போர் என்றும் நிரந்தரமாக நடாத்தப் பெறும் இயல்புடையதன்று. அஃது ஒவ்வொரு போது நடாத்தப்பெறும் இயல்புடையது. அதனை நிரந்தரமாக நடாத்தப் புகுவது அறமன்று. அதனால் பலதிற இடர் விளையும்.

ஒத்துழையாப் போருக்கு இந்தியா இன்னுந் தன்னைப் பண்படுத்தி நிற்கவில்லை என்பதை இருமுறை நடைபெற்ற அப்போர் நன்கு விளக்கிவிட்டது. இந்நுட்பங் கண்டே மகாத்மா முதன்முறை கதர்த் தொண்டிலும், இரண்டாம் முறை தீண்டாமை விலக்குத் தொண்டிலும் தலைப்படலானார். போரில்லாக் காலத்தில் ஆக்கவேலையில் தலைப்பட்டுழைப்பதே அறிவுடைமை.

காந்தியடிகள் இதுபோழ்து தீண்டாமை விலக்குத் தொண்டில் தமது கருத்தைச் செலுத்திவருகிறார். மற்றவர்கள் என் உறங்குதல்வேண்டும்? அவர்கள் காங்கரஸைக் காலத்துக்கேற்ற முறையில் நடாத்த என் முன் வரலாகாது?

இப்பொழுது ஒத்துழையாமையில் கருத்துச் செலுத்துவது அநாவசியம். காங்கரஸ் ஏற்றுள்ள ஒத்துழையாமையை விலக்க முயல்வது சிறப்பு. அம்முயற்சி காங்கரஸ் வாயிலாகவே நடைபெறுதல் வேண்டும். ஒத்துழையாப் போர் நிறுத்தப் பெற்றிருத்தலால், அகில இந்திய காங்கரஸ் கூட்டத்தைக் கூட்டுதற்கு எவ்வித தடையும் தற்போது இராதென்றே நம்புகிறோம்.

காங்கரஸ் வாயிலாகத் தற்காலத்துக்குரிய கடனாற்ற முற்படாது, ஆங்காங்கே சிற்சிலர், காங்கரஸ் பெயரால் 'ஜனநாயகக் கட்சி' என்றும், 'சுயராஜ்யக் கட்சி' என்றும் பல கட்சிகளைக் காண்பதிலும், அவைகளை வளர்க்க முயல்வதிலும், அவைகளை எதிர்ப்பவர்களோடு வாதம் புரிவதிலும் அரிய காலத்தைச் செலவழித்து வருவது குறித்து வருந்துகிறோம். இம்முயற்சிகளால் காங்கரஸுக்கு ஆபத்து நேர்ந்தாலும் நேரும்.

சிறு சிறு கட்சிகள் ஆங்காங்கே தோன்றித் தோன்றி இயங்கின், காங்கரஸ் நிலை என்னாகும்? ஆகவே, காங்கரஸ் தலைவர்கள், அகில இந்திய காங்கரஸ் கூட்டத்தைக் கூட்டி, ஒத்துழையாமையை விலக்கிக், காலத்துக்குரிய திட்டங் கோலித் தேச சேவை செய்ய முற்படுவார்களாக.

வரப்போகுஞ் சீர்திருத்த முறைப்படி அமைவுறும் சட்டசபையில் காங்கரஸ்காரர் நுழைதல்வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றிப் பலதிறக் கருத்துக்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதற்கு முந்திய அனுபவத்தைச் சீர்தூக்கிப் பார்த்து ஒருவித முடிவிற்கு வருதல்வேண்டும். முதன்முறை எழுந்த ஒத்துழையாமையிலும், இரண்டாம்முறை எழுந்த ஒத்துழையாமையிலும் சட்டசபை விலக்குச்செய்யப்பட்டது. அவ்விலக்குக்குப் பிற்போக்காளர் மதிப்புத் தரவேயில்லை. தக்க சமயம் வாய்த்ததென்று பிற்போக்காளர்கள் சட்டசபைகளைப் பற்றி வெறுக்கத்தக்க சட்டங்கள் செய்யப்படுவதற்குத் துணை நின்றார்கள். பிற்போக்காளர்கள் வயத்தில் சட்டசபை முதலிய அமைப்புகள் சிக்கிக்கொள்வதால் நாட்டுக்கு நலன் விளைவதில்லை. நலன் விளையாதொழியினும் தீமையாதல் விளையாதிருக்கிறதா? பெரிதும் தீமையே விளைகிறது. ஆதலால் உரிமைப் போராட்டத்தில் ஈடுபடுவோர், சட்டசபை முதலிய அமைப்புகள் பிற்போக்காளர் வயப்படாதவாறும் காத்துவரக் கடமைப்பட்டிருக்கிறார். இதற்குத் தேசிய மகா சபையாகிய காங்கரஸ் மாறுபட்டு நிற்றல் கூடாது.

காங்கரஸிலுள்ள சிலருக்குச் சட்டசபை பிடியாதிருக்கலாம். அவர்கள் ஆக்கவேலையில் தலைப்பட்டுத் தொண்டு செய்து வரலாம். மற்றவர்கள், பிற்போக்குக் கட்சிகளுக்குச் சட்டசபை இரையாகாதவாறு காத்து வரலாம். சட்டசபை, பிற்போக்குக் கட்சிகளுக்கு

இரையாகாதவாறு காப்பதும் தேசத் தொண்டின் பாற்பட்டதேயாகும். காங்கரஸ் இத்துறை நண்ணாது வாளா கிடக்குமாயின், நாட்டில் மூலைக்கு மூலை சிறு சிறு கட்சிகள் பெருகித் தேசபக்தியையே குலைத்துவிடும். நாளடைவில் காங்கரஸின் மதிப்புங் குலைவுறும்.

காங்கரஸ்காரர்களிற் சிலர் சட்டசபை வேட்கை கொண்டு, ஆங்காங்கே தனித்தனிக் கட்சி கண்டு வருகிறார். இது தவறு. காங்கரஸ் பெயரைக் கொண்டோ கொள்ளாமலோ காங்கரஸ் வாதிகளிற் சிலர் தனிக்கட்சிகள் கண்டு வருகிறார். இது, காங்கரஸுக்குள் பிளவை உண்டுபண்ணுவதாகும். ஆகவே, காங்கரஸ் கட்டளை கொண்டே சட்டசபை முதலிய அமைப்புகளைப் பற்ற முயல்வதே சிறப்பு.

ஒத்துழையா இயக்கம் உறங்கியுள்ள இந்நாளில், காங்கரஸ் சட்டசபை நுழைவுக்கு இடந்தருமென்பதில் ஐயமில்லை. வேண்டற்பாலது முயற்சியே. காங்கரஸ் தலைவர்களிற் சிலர் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடுவதிலும், வாதங்களை எழுப்புவதிலும் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார். இவ்வுழைப்பை, அகில இந்திய காங்கரஸைக் கூட்டுவதிலுங், காலத்துக்கேற்ற திட்டங் கோலுவதிலும் ஏன் திருப்பலாகாது?

உரிமையில்லா நாட்டில், உரிமைக்காகப் பாடுபடும் ஒரு தேசிய மகாசபை, நாட்டில் பல கட்சிகள் தோன்றுதற்கும், அவைகளின் ஆக்கத்துக்கும் இடந் தந்துவரின், உரிமைவேட்கையே பட்டொழியும் நிலை ஏற்படலாம். காங்கரஸால் பிற்போக்குக் கட்சிகளின் தோற்றத்தையும், அவைகளின் ஆக்கத்தையும் எப்படித் தடுத்தல் கூடும் என்று சிலர் கருதலாம்.

பிற்போக்குக் கட்சிகள் தோன்றுவதன் நோக்கம் சட்டசபை முதலிய அமைப்புக்களைப் பற்றுதற்கென்பதை விரித்துக் கூறவேண்டுவதில்லை. அவர்கள் பற்ற விரும்பும் சட்டசபை முதலியவற்றைக் காங்கரஸ்காரர் பற்றிக்கொண்டால் பிற்போக்குக் கட்சிகளின் நிலை என்னாகும்? அவை தாமே மாண்டு போகும். உரிமை இல்லா நாட்டில் எழும் பிற்போக்குக் கட்சிகளை ஒழிக்குதற்கு இஃதொரு சிறந்த வழியாகும்.

காங்கரஸ் உரிமைக்கு உழைப்பதுடன், பிற்போக்குக் கட்சிகளின் ஆக்கத்தையுஞ் சிதைத்து வருதல் வேண்டும்.

ஐரோப்பா நிலை

ஐரோப்பிய நாகரிகத்தையே 'நாகரிகம்' என்று தற்போதைய உலகம் கருதிக்கொண்டிருக்கிறது. செல்வாக்குள்ள தேசங்களைப் பலவழியில் செல்வாக்கில்லாத தேசங்கள் பின்பற்றி நடப்பது இயல்பு. செல்வாக்கில்லாத தேசங்கள் தங்களுக்கென ஒன்றை நினைக்கப் போதிய நிலைமை பெறாமையால், அவைகள் செல்வாக்குள்ள தேசங்கள் வழி உழன்று விடுகின்றன.

ஐரோப்பா 'குடியாட்சி' என்றால், எங்கும் 'குடியாட்சி'ப் பேச்சு! ஐரோப்பா 'ஜன நாயகம்' என்றால், எங்கும் 'ஜனநாயக'ப் பேச்சு! ஐரோப்பா "கோனாட்சி" என்றால், எங்கும் கோனாட்சிப் பேச்சு—இவ்வாறு ஐரோப்பா வழி உலகம் இயங்கி வருகிறது; இதில் இந்தியா பேர்பெற்றது என்று கூறல் மிகையாகாது.

ஐரோப்பிய நாகரிக முதிர்ச்சி ருஷ்யாவில் திரண்டு உருண்டு புரட்சியாகிப் பொதுவுடைமை ஆட்சியை நிறுவியது. அவ்வாட்சி ஆங்கே உருக்கொண்ட நாள் முதல், பல விடங்களில் பொதுவுடைமைப் பேச்சு எழலாயிற்று. இப்பொழுது ருஷ்யா எந்நிலையிலிருக்கிறது? அது லெனின் கோலிய முறைகளிற் சிலவற்றினின்றும் பிறழ்ந்து வரும் நிலையிலிருக்கிறது.

ருஷ்யாவில் தற்போதுள்ள ஆட்சி, லெனினுக்கு வலதுகையாயிருந்த டிராட்ஸ்கியை நாடு கடத்தவும், அமெரிக்கா முதலிய கொழுத்த முதலாளி தேசங்களுடன் தனது கொள்கைக்கு

மாறுபட்ட முறையில் உடன்படிக்கை செய்து கொள்ளவும் துணை செய்து வரும் நிலைமையைப் பெற்றிருக்கிறது. இன்னுஞ் சில நாளில் லெனின் பெயரால் என்னென்ன நடக்குமோ தெரியவில்லை.

இப்பொழுது ஐரோப்பாவில் "ஹிட்லர்" இடி, இடித்துக்கொண்டிருக்கிறது. தொடக்கத்தில் ஹிட்லர் பலவிடங்களில் வெறுக்கப்பட்டார். இப்பொழுது அவ் வெறுப்புத் தணிந்து வருகிறது. இனி ஹிட்லர் போற்றப்படுவரோ என்னவோ தெரியவில்லை. இப்பொழுது ஐரோப்பிய நாகரிகக் கயிற்றின் ஒரு முனையை ருஷ்யா ஈர்க்கிறது; மற்றொரு முனையை ஜெர்மனி ஈர்க்கிறது. எதை எது ஈர்த்துத்தள்ளும் என்பது பின்னே தெரியும்.

ஐரோப்பாவில் பெரும்போர் மீண்டும் நிகழும் என்று சிலர் குறி சொல்கிறார். அக்குறி மெய்யானால், உலகம் பலதிற இடுக்கணுக்குள்ளாகிப்பின்னே தெளிவு பெற்று நன்னிலை எய்தும். உலகம் பல வழியிலும் இடருறும் நிலைமை உண்டுபண்ணியது ஐரோப்பா நாகரிகமேயாகும். ஐரோப்பா நாகரிகம் முதலாளி தொழிலாளி போராட்டத்தைத் தோற்றுவித்த நாள்தொட்டு மன்பதையில் பிணக்குகள் நிரம்பலாயின. அப்போராட்டம் ஒழிந்தாலன்றி உலகுக்கு உய்வில்லை.

ஒருபால் பொருள் பெருகும் நிலையையும், மற்றொருபால் பொருள் அருகும் நிலையையும் உண்டுபண்ணிக்கொண்டிருக்கும் நாகரிகம், எத்தகைச் சிறப்புடையதாயினும், அது "நாகரிகம்" என்னும் பொருளுடையதாகாது. மக்களெல்லாரும் வயிறார உண்டு, அமைதியில் நின்று, இயற்கை அன்னையுடன் உறவுகொண்டு வாழ்ந்து, சகோதர நேயத்தை வளர்த்து, இன்புறுவதே சிறந்த நாகரிகமாகும். ஐரோப்பாவின் தற்கால நாகரிகத்தில் இவ்வின்பம் உண்டா என்பது கவனிக்கத்தக்கது.

கண்மூடிக் கொண்டு எல்லாவற்றிற்கும் ஐரோப்பா ஐரோப்பா என்று விழுவது அறிவுடைமையாகாது. எதையும் பகுத்தறிவால் சீர்தூக்கிப்பார்த்து தள்ளல் கொள்ளலில் தலைப்படுவது சிறப்பளிக்கும்.

ஐரோப்பா, இயற்கை அன்னையை மறந்து நீண்ட காலமாகிவிட்டது. முதலாளி தொழிலாளி போருக்கு அம்மறப்பே சிறந்த காரணமாகும். இயற்கையின் போக்கையும் நுட்பத்தையும் உணருமிடத்தில் போராட்டம் எது?

ஐரோப்பா எளிதில் நல்லுணர்வு பெறுதல் அரிது. அது பலதிறப் போராட்டங்களுக்கு இரையாகிய பின்னரே நல்லுணர்வு பெறும். போராட்டத்துக்கே ஆங்குள்ள அரசியல் வாதிகள் முயன்று வருகிறார்கள். ஒரு தேசத்தை மற்றொரு தேசம் நம்புவதில்லை. தேசத்துக்குத் தேசம் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் போலியாகவே முடிகின்றன. உள்ளொன்று வைத்துப் புறமொன்று கொண்டு பேசும் பேச்சுக்களும், நிகழ்த்தும் செயல்களும் பொருளற்றுப் பொன்றுதல் இயல்பு.

இயற்கை நெறியினின்றும் வழுக்கி வீழ்ந்துள்ள ஐரோப்பாவை எல்லாவற்றிற்கும் எடுத்துக்காட்டாகக் கொண்டு மற்ற நாடுகளும் செயற்கை இருளில் வீழ்ந்து வருகின்றன. ஒன்றைக் கொள்ளுமுன் - ஒன்றைத் தள்ளுமுன் - பகுத்தறிவைப் பயன் படுத்துவது சிறப்பு என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

*காந்தியடிகள் வருகை

காந்தியடிகளின் தென்னாட்டு வருகையைப்பற்றிப் பத்திரிகைகள் அறிக்கை செய்துவருகின்றன. வரவேற்புமுயற்சிகளும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. காந்தியடிகள் எத்தனையோ முறை தென்னாடு நோக்கியுள்ளார். ஒவ்வொரு முறை ஒவ்வொரு காரணம் பற்றி அடிகள் போந்தமையை விரித்துக் கூறவேண்டுவதில்லை. இம்முறை, அடிகள் எந்நோக்குடன் போதரு

கிறாரென்பது நேயர்கட்குத் தெரியும். அந்நோக்கம் விழுப்பமுடைய தென்பதில் சிறிதும் ஐயமில்லை.

பல நூறு நூறு ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டுள்ள சகோதரர்கள் நலங்கருதிக் காந்தியடிகள் நீண்டகாலமாகத் தொண்டாற்றி வருகிறார். அத்தொண்டு பெரிதும் பொதுப்படவே ஆற்றப்பட்டு வந்தது. இம்முறை அடிகள் அத்தொண்டின்மீது சிறப்பாகக் கவனஞ்செலுத்தி வருகிறார். வேறு தொண்டுகளில் தலையிடாது தீண்டாமை விலக்குத் தொண்டொன்றில் மட்டும் அடிகள் கவலை செலுத்தி வருதலால் நலன் விளைதல்கூடும். இதற்குச் சாதிஇந்துக்களின் துணை பெரிதும் வேண்டற்பாலது. அவர்கள் துணை செய்யா தொழியினும் தீங்கு செய்யாமலிருந்தால் போதும்.

ஜாதிப்பித்தில் மூழ்கிக் கிடக்கும் சிலருக்கு இப்போது வெறி ஏறிவருகிறது. அவ்வெறியால் அவர்கள் மனம்போனவாறு பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். தீண்டாமை இந்து மதத்தில் இருத்தல் வேண்டுமென்று அவர்கள் கச்சை கட்டிப் போரிடுகிறார்கள். இஃது அறமா? அன்பா?

தீண்டாமையைவிரும்பும்ஒருநெறி கடவுள்நெறியா என்பது கேள்வி. கடவுளிலும் தீண்டுங்கடவுள்-தீண்டாக் கடவுள் என இருகடவுளர் உண்டோ என்பதை ஜாதிநேயர்கள் கவனிப்பார்களாக. எவர் எக்கட்டுக் கட்டினும், எத்தடை கிளத்தினும் இனிவரும் உலகம் தீண்டாமையைப் போற்றாதென்பது உறுதி. தீண்டாமை உள்ளவரை இந்துமதம் ஆக்கம் பெறாதென்பதும் ஒருதலை. வைதிகர்கள் பிடிவாதத்தை விடுத்துக் காந்தியடிகளுடன் கலந்து, தீண்டாமையை ஒழித்து, ஜாதிமதங் கடந்து நின்ற முனிவர்களால் வளர்க்கப் பெற்ற அருள்நெறியை ஓம்ப முன் வருவார்களாக.

காந்தியடிகளின் தென்னாட்டு விஜயத்தால் நலன் விளைவதாக.

தமிழ் வகுப்பு

தமிழ் மொழியை ஓம்புதற்கு இந்நாளில் ஆங்காங்கே சிறு சிறு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அம்முயற்சிகளிற் சில போற்றற்குரியன. 'தாய் மொழியை வளர்ப்பதில் தமிழர்கள், ஊக்கஞ் செலுத்துவதில்லை' என்னும் பழி தமிழர்களுக்குண்டு. அப்பழியைப் போக்கத் தமிழர்கள் பாடுபடுதல் வேண்டும்.

பண்டை நாளில் சேரன் அவையிலும், பாண்டியன் சங்கத்திலும், சோழன் கழகத்திலும் அரசு வீற்றிருந்த நந்தமிழன்னை, இப்போது எங்கே யிருக்கிறாள்? எந்நிலையிலிருக்கிறாள்? தமிழன்னையைப் பழைய நிலைக்குக் கொண்டுவரச் செய்யத்தக்க முயற்சிகள் பலதிறத்தன. அவைகளுள் ஒன்று-சிறந்த ஒன்று - ஆங்காங்கே தமிழ் வகுப்பு வைத்து நடாத்துவதாகும்.

சென்னையில் ஸ்ரீமான் சேஷாசல ஐயரவர்கள் தமிழ்க் காதல் ஒன்றே கொண்டு, தமிழ் வகுப்புக்கள் நடாத்தித், தமிழ்த் தாய்க்கு விழுத் தொண்டு செய்து வருவதை ஈண்டுக் கழிபேருவகையுடன் குறிக்கிறோம். ஸ்ரீமான் ஐயரவர்கள் தொண்டால் ஏழைமக்கள் சிலர் பெரும் புலவராகித் தமிழன்னைக்குச் சேவைசெய்து அவள்தன் ஆசி பெற்று வருகிறார். இப்பொழுது நண்பர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்காதலால், தமிழ் வகுப்புநடாத்த முன் வந்திருப்பதை மகிழ்ச்சியுடன் தமிழ் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை இராயப் பேட்டையிலும், சிந்தாதிரிப்பேட்டையிலும் திரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தொடங்கியுள்ள தமிழ் வகுப்புக்களுக்கு முறையே திறப்பு விழா நிகழ்த்திய டாக்டர் சாமிநாத ஐயரவர்களும், மறைமலையடிகளும் தமிழ் வகுப்பின் அவசியத்தையும், அதனால் விளையும் நலன்

களையும் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டினார்கள். பல்கலைக் கழகங்களாலும், மகாநாடுகளாலும் விளையும் நலன்களைப் பார்க்கிலும், இவ்வகுப்புக்களால் பெரும் பெரும் நலன்கள் விளையும் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

இப் பெருந் தொண்டில் தலைப்பட்டுள்ள ஸ்ரீமான்கள் சேஷாசலஐயருக்கும், மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கும் நமது வாழ்த்து உரியதாக. தமிழ்நாட்டின் நானாபக்கங்களிலும் இத்தகை வகுப்புக்களை நடாத்த ஆங்காங்குள்ள தமிழ் நேயர்கள் உறுதியும் ஊக்கமுங் கொண்டு உழைப்பார்களாக

பரணர்

“பரணர்” என்னும் பெயரிய நூல் வரப் பெற்றோம். இந்நூல், சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சிக் கிளையின் சார்பில், வித்துவான் - வே. வேங்கட ராஜுலு ரெட்டியார் அவர்களால் யாக்கப் பெற்றது. பரணரைப் பற்றிய பல நுட்பங்களும், உண்மைகளும், வரலாறுகளும், பிறவும் இந்நூற்கண் செறிந்து கிடக்கின்றன. ஆராய்ச்சிக்குக் கருவிகளாகக் கொள்ளப்பட்டுள்ள சான்றுகள், பொருந்திய முறையில் அமைந்திருக்கின்றன. பலவேறு நூல்களில் பலவாறு சொல்லப்பெற்ற ஒருவரை, ஒழுங்குபட ஒருநூலில் நிறுத்திக் காட்டுதல் அருமை. அவ்வருமைப் பாட்டை இந்நூல் எளிமையதாக்கியிருத்தல் சாலவும் போற்றற் குரியது. பரணரைப் பற்றிய பலதிற ஐயங்கள் இந்நூற்கண் களையப் பட்டிருக்கின்றன. நன்முறையில் நூலைஒழுங்குபடுத்தித் தமிழுலகிற்குத் தந்த ஆசிரியர் ரெட்டியார் அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதுங் கடமைப்படுதல் வேண்டும். திருவாளர் ரெட்டியார் அவர்களின் ஆராய்ச்சித் திறனும், மொழிப்புலமையும், பொருண் மணிகளை ஒழுங்கு செய்யும் ஆற்றலும் பாராட்டத் தக்கன. ரெட்டியார் அவர்களின் உரைநடை புலவர்க்கு விருந்தாகு மென்பதில் ஐயமில்லை. நூலின் இறுதியில் பரணர் பாட்டுக்கள் கோவை செய்யப் பட்டிருக்கின்றன. இவ்வாறு வேறு பல புலவர்களின் பாடல்களும் கோவை செய்யப்படின் தமிழுலகம் நலம் பெறும். இத்தொண்டில் ரெட்டியார் அவர்கள் ஈடுபட்டு உழைத்துள்ளார் என்பது இந்நூலின் முன்னுரையால் தெரிய வருகிறது. அவ்வுழைப்புக்கள் யாவும், விரைவில் நூல்வடிவங் கொள்ளச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் முயல்வார் என்று நம்புகிறோம். திருவாளர்-வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் வாயிலாகத் தமிழுலகுக்கு நலன் செய்வித்த சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்கு நமது நன்றி உரியதாக. விலை ரூபா 2½; விலாசம்: மதராஸ் யூனிவர்சிடி.

திருக்குறள் நாட் குறிப்பு—1934

தென்னிந்திய நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட, திருக்குறள் நாட் குறிப்பு (1934) நன்முறையில் கோவை செய்யப் பட்டிருக்கிறது. இக்குறிப்பில் ஆங்கிலப் பஞ்சாங்கம், தமிழ்ப் பஞ்சாங்கம், விடுமுறை நாட்கள், திருநாட்கள் முதலியன அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் திருக்குறளினின்றும் அகழ்ந்தெடுத்த ஒவ்வொரு மணி அணி செய்கிறது. ஒவ்வொரு குறளுக்கும் சுருங்கிய முறையில் கருத்துரை வரையப் பட்டிருக்கிறது. இத்திருக்குறள் நாட்குறிப்பு ஒவ்வொரு தமிழரிடத்திலும் இருத்தல் வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. விலை அணா 5; கிடைக்கு மிடம்: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, சென்னை.

ஜோன் வரலாறு

இஃதொரு மொழிபெயர்ப்பு நூல். இதை ஆங்கிலத்தினின்றும் தமிழில் மொழி பெயர்த்தவர் திருமதி - நீலாம்பிகை அம்மையார். இவ்வம்மையார் மறைமலையடிகளின் மகளார். இம்மகளார் தமிழ் மணங்கமழும் முறையில் உரைநடை எழுதும் ஆற்றல் வாய்ந்தவர்.

ஜோன் மாதாசியின் பிறப்பு, வளர்ப்பு, போர்த்திறன், தெய்வபக்தி முதலியன நூற்கண் விளங்க ஓதப்பெற்றிருக்கின்றன. இந்நூலைத் தமிழுலகிற்குத் தந்த திருமதி - நீலாம்பிகையார்க்கு நமது நன்றி உரியதாக. விலை அணா 8; கிடைக்குமிடம்: தென்னிந்திய நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி; சென்னை.

சுலோசனை

இந்நூலின் இரண்டாம் பதிப்பு வரப்பெற்றோம். இதனை வடமொழியினின்றும் தமிழில்மொழி பெயர்த்தவர் பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியாரவர்கள். இம் மொழிபெயர்ப்புத் தொண்டில் பண்டிதமணி பெருந்திறமை வாய்ந்தவர் என்பது உலகறிந்ததொன்று. நூலின் பொருளும், நடையும், பிறஅமைப்பும் மகிழ்ச்சி யூட்டுகின்றன. விலை அணா 4; விலாசம்: சன்மார்க்க சபையார், மேலைச்சிவபுரி.

குறுந்தொகை

குறுந்தொகை மூலம் நமது பார்வைக்கு வந்தது. இதனைப் பதிப்பித்தவர் வித்வான் சோ. அருணாசல தேசிகரவர். பதிப்பு நன்முறையில் அமைந்திருக்கிறது. இறுதியில் செய்யுள் முதற்குறிப்பு, பாடினோர் பெயரட்டவணை, சொல்லகராதி முதலியன அடங்கப் பெற்றுள்ளன. விலை ரூபா ஒன்று. விலாசம்: வித்வான், சோ. அருணாசல தேசிகர், புரசை, சென்னை.

மாதர் மறுமணம்

இந்நூல் திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் எழுதப்பெற்றது. இதன்கண் மாதர் மறுமணம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இது பெரிதும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் சமூகத்திற்குப் பயன்படு முறையில் எழுதப்பட்டிருக்கிறது. விலை அணா 4; விலாசம்: மு. சின்னையா செட்டியாரவர்கள், மகிபாலன்பட்டி.

மேருமந்தார்

இந்நூல், 'மேருமந்தர புராணம்' என்னும் பெருங்காப்பியத்தையொட்டி வித்வான் - ஸ்ரீ. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்களால் எழுதப்பட்டது. கதைப்பகுதிகளெல்லாம் செய்யுட் பொருளைத் தழுவியே எழுதப்பட்டுள்ளன.

இந்நூல், பிறர்பொருள் வெஃகுதல், பகை கோடல் முதலியவற்றான் நேருந் தீமைகளையும், பொறுமை, அருள், ஞானம் முதலியவற்றான் உண்டாகும் நன்மைகளையும் நன்கு விளங்கக்கூறுவது. இது கற்போருக்கு நல்லொழுக்கத்தையும் நல்லறிவினையும் நல்கும் என்பது ஒருதலை. அன்றியும், உரைநடை செவ்விதாக அமைந்திருத்தலின், இந்நூல், கற்கும் மாணவருக்குக் கட்டுரை எழுதாம் ஆற்றலையும் முற்றவிளைக்கும்.

இந்நூலில் வந்துள்ள அருஞ்சொற்கட்குப் பொருளும், இந்நூலிற் கூறப்பட்டுள்ளோரின் வரலாற்றுச் சுருக்கமூம் இப் புத்தகத்தின் கற்றிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை, மாணவர்க்குப் பெரிதும் பயன் தரும். விலை ரூபா ஒன்று.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,

பெண் ணுரிமை வேண்டுமா,

தீண்டாமை யொழிதல் வேண்டுமா,

சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,

இயற்கை யின்பம் வேண்டுமா,

வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

		ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	....	2	0
தமிழ்த் தென்றல்	....	2	0
முருகன் அல்லது அழகு	....	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	....	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	....	2	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	....	0	8
சைவத்தின் சமரசம்	....	0	8
சைவத்திறவு	....	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	....	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம் ...	....	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	....	0	8
நாயன்மார்	....	0	3
சைவ சமய சாரம்	....	0	1
இமயமலை அல்லது தியானம்	....	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	....	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்	....	0	4
முருகன் அருள் வேட்டல்	....	0	4
சமரச சன்மார்க்க போதம்	...	0	8

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)....	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும் பத வுரையும் சரித்திரக் குறிப்பும்)	0	12
முருகன் திருவருட்பா	0	8
தேவி தோத்திர மஞ்சரி	0	4
குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்)	1	4
விநாயகர் பனுவல் திரட்டு	0	6
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்		
கிளேஸ்	0	5
ஷை ரப்	0	3
சிவபுண்ணியத் தெளிவு	0	3
காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன்	0	6

திருவாசகம் மூலமும் உரையும் விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின் **மகாபாரதம் தமிழ் வசனம்**

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப் பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட் டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்

அமிர்த சாகரம்

தேக பலத்தையும், இரத்த விருத்தி யையும், தாது புஷ்டியையும் கொடுப் பதில் எங்களுடைய

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

அமிர்த சாகரம் போன்றவை. 32 மாத் திரைகளடங்கிய டப்பி 1 க்கு ரூபா 1.

இனம்! இனம்!

இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி என்னும் ஆரோக்கிய மலரைக் கேட் போருக்கு இனாமாகவும் தபாற் செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

தாது புஷ்டிக்கு

மன்மத குளிகை

வாலிபப் பருவத்தில் முறைதவறிய தீச்செயல்களால் நீங்கள் இழந்த பலம், தாது நஷ்டம், போகசக்திக் குறைவு இவைகளைப்போக்கி மன உற்சாகத்தை திரும்பக் கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விருத்தி முதலியவைகளை யுண் டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

20 குளிகை ரூபா 2.
வி. பி. செலவு வேறு.

C. மலையப்பசாமி,
சித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.

நவசக்தி

பெரிய புராணம்

மூலமும்

அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !

சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ் மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச் சுவை நனி சொட்டிக் கொண் டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரிய புராணம். கடவுள் அன்பு, ஆன்ம நேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள் நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரிய புராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைய அரும்பெரு நூலின் மூலமும், "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும், அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும் பொருட்டு மாதந்தோறும் சஞ்சிகை உருவில் வெளிப்படுத்தப் படுகின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஒப்பு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. 25 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை ரூபா 5.

" " " வெளியூ—தபாற் செலவுடன் " 6.

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,

12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

		ரூ.	அ.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது)	...	5	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்)	...	0	8
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம்	...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி	...	1	6
குருதேவர் வாக்கியம் ...	...	0	5
நமது தாய்நாடு ...	...	0	8
பக்தியோகம் ...	...	0	10
கர்மயோகம் ...	...	0	12
சிகாகோ பிரசங்கம் ...	...	0	5
விவேகானந்தரின் கடிதங்கள்	...	0	8
எனது போர் முறை ...	...	0	2
பவாஹாரி பாபா ...	...	0	3
ஜகஜீவபர விளக்க வினாவிடை	...	0	13
பக்தி மார்க்கம் ...	...	0	2
முத்திநெறி ...	...	0	5
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்		0	2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

ரிக்வேதம் (தமிழில்)

(மாதாந்தரப் பத்திரிகையாக ரிஜிஸ்தர் செய்தது)

ரிக்வேதம் தமிழில் 64 மாதங்களில் மாதம் ஒரு அத்தியாயமாக 1933வரு ஏப்ரல் மாதத்திலிருந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. எட்டு மாதப் பாகங்கள் கொண்டது ஓர் அஷ்டகம் (வால்யம்). எட்டு அஷ்டகங்கள் கொண்டது ரிக்வேதம் முழுவதும். ஒவ்வோர் அஷ்டகத்தின் முடிவிலும் வடமொழி மூலம் வெளிவரும். சந்தா விவரம்:

பெதர்வெயிட் காகிதப் பதிப்பு 8 மாத பாகங்களுக்கு ரூ 8—0—0
கிளேஸ் காகிதப் பதிப்பு 8 மாத பாகங்களுக்கு ரூ 4—0—0

காரியதரிசி, வேதப்ரவசன மந்திரம்,
27, முத்து முதலி வீதி, இராயப்பேட்டை, சென்னை.

சத்தியம் விளங்க வேண்டுமா?

வெள்ளம் வருதற்கு முன்பே
அணைகோலிக் கொள்வது நல்லது

உங்கள் எதிர்கால நிலைமையைத் தெரிந்து கொண்டால் அதற்குத் தக்கபடி வாழ்க்கை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் கூடும்.

திருமணப் பொருத்த நிமித்தம் சிறப்பாகத் தெரிந்து கொள்ளுங்கள். கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள்; அல்லது நேரே வாருங்கள்.

பிறந்த வருடம் மாதம் தேதி மணி இடம் முதலியவற்றைச் சரியாகக் குறித்தனுப்புங்கள்.

ஒருபாவம் முழுதிலும் சொல்ல ரூபா 10; ஒரு ஜாதகத்தின் பொதுப் பலன் கூற ரூபா 10; ஒரு ஜாதகக் குறிப்பு மட்டும் எழுத ரூபா 2; குறைதி சயக்கலை உரைக்க ரூபா 2.

C. J. கிருஷ்ணசாமி,
38, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

திரு அருட்பா - ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு

சுவாமிகள் கையெழுத்தைக்கொண்டு பிழை களையப்பட்ட சுத்த பாடமுள்ளது.
அநேக விஷயங்களும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் நிறைந்தது.

6-வது தனிப்பாசுரப் பகுதி - அடக்கவிலை அணா 5.

(பால மத ஸ்தோத்திரங்கள் - கலியுகக் கோலம் - குடும்ப கோஷம்)

கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை வேத ப்ரவசன மந்திரத்து
சிவத்தியானானந்த மஹரிஷி யவர்கள் எழுதிய
கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவரவில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

Registered No. M. 1500. "NAVASAKTI"

ஒரே கடவுள் ஒரே சமயம்

மக்கள் அனைவரும் சகோதரர்

சமரச சன்மார்க்க போதம்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார் இயற்றியது.

உலகம் விரும்பும் சமத்துவம், சுதந்திரம், சகோதரநேயம் என்பவற்றையும் இந்நூல் அறிவுறுத்துகின்றது.

வளர்ச்சிக்குத் தடைகளாயுள்ள மூட வழக்க ஒழுக்கங்களை ஒழிப்பதற்குரிய சீர்திருத்த முறைகளை இந்நூல் நன்கு விளக்குகின்றது.

ஒரே கடவுள் ஒரே சமயம் என்னும் உண்மையை இந்நூலிற் காணலாம்.

இயற்கை நுட்பங்கள் இந்நூலில் இனிது ஆராயப்படுகின்றன.

இந்நூல் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கத்தக்க அணியாம்.

விலை அணா 8.

சாதன சதுஷ்டயம்

முக்திமார்க்கத்திற்குரிய அருமையான போதனைகள்

மகாபாரதத்தில் கூறியிருக்கும் ஸ்ரீக்ருஷ்ணாசாரியாருடைய பெரிய தகப்பனார் தேவாபி எனும் சிவன் முக்தர், இப்போது இமயமலையில் மாஸ்டர் குதூமி என்ற பெயருடன் வீற்றிருக்கின்றார். இம்மகரிஷி ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சிறு வயதில் அளித்த மொழிகளாகத் தொகுத்த உபதேச போதனைகளுக்கு ஸ்ரீமான் லெட்பீடர் அவர்களும் டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையாரும் செய்த வியாக்கியான உரைகள், இங்கிலீஷினின்று சாதாரண தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டு "சாதன சதுஷ்டயம்" என்ற பெயருடன் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

இந்நூல் இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே நன்கு சாதனங்களைக் கைக்கொள்ள வேண்டிய முறையைக் காட்டுவதோடு மன்னோர் தான் அறியக்கூடிய விசார சாதகமாயுமிருக்கின்றது.

கிரௌன் பக்கம் 520 ; 29 அத்தியாயம்; உயர்ந்த காகிதம். விலை ரூபா 2

திவ்ய ஞான தீபம்

இது, வாழ்வெறி - விசாரமுறை - தேகங்கள் - மானி ஜென்மகதி - கர்மகதி - மரணத்திற்குப்பின் - மார்க்கம் - தியானம் - ஞானசாதனம் - சீவன் முக்தர்கள் - குருநாதனைக் காணும் வழி - சிஷ்யத்வப்படிகள் - ஞானபூமிகள் - முக்தர் நிலைகள் - மாட்சி முதலிய பொருள்களைப் பற்றி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது. அல். 330 பக்கங்கள் கொண்டது. நல்ல வெள்ளை காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Velayuthan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.